# சாதனைத் திரட்டு

©
தமிழ்நாடு அரசாங்கம்
1961

தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை
வெளியீடு

[விலை : 25 காசுகள்

முதற் பதிப்பு: ஜூலை, 1961.

# முன்னுரை

நமது பொருளாதாரப் போராட்டம் ஓயவில்லை. அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

உலகில் அனைவருமே செயல் செய்கின்றனர். ஆனால் ஒரு சிலரே திட்டமிட்டுச் செயலில் இறங்குகின்றனர். அவர்களே வெற்றி பெறுகிறார்கள். எண்ணித் துணியாத செயல் வெற்றி பெறாது; பெருமை தராது.

நாட்டின் நிலை, பொருளாதார வளம், மூலப் பொருள்கள், நமது திறமை, அந்நிய உதவி ஆகிய இத்தனை அம்சங்களையும் சிந்தித்து முடிவெடுத்த பின்னரே, நாம் நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் லட்சிய அளவை நிர்ணயித்தோம். திட்டத்தின் செலவு ரூ. 152 கோடியிலிருந்து ரூ. 186 கோடியாகி உயர்ந்தது. எனவே, நமது திட்டக்கால லட்சியங்களும் பெருமளவு நிறைவேறியிருக்கும் என எதிர்பார்க்கலாம். உண்மையில் நமது உழைப்பு, திட்ட இலக்குகளுக்கு மேலாகவே நமக்குப் பலன்களைப் பெற்றுத் தந்துள்ளது.

நமது பொருளாதார யாத்திரையில் மூன்றாவது திட்டக் காலப் பயணத்தைத் தொடங்கி இருக்கின்றோம். இந் நிலையில் நமது கடந்த கால வெற்றிகளைக் கணக்கிட்டுப் பார்ப்பதில் புதியதோர் உற்சாகமும், எதிர்காலத்தில் நம்பிக்கையும் ஏற்படும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகளை விளக்கும் இந்நூல் தமிழ்ப் பெருமக்களுக்குப் பயன் படும் என்று நம்புகிறோம்.

சென்னை–9, ஜூலை, 1961.

நெறியாளர்,
தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை.

# 1. உழவு

நமது பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதற்குக் காரணம், நம் நாட்டு மக்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் உழவர்களாக விளங்குவதே. முதல் ஐந்தாண்டுத் திட்டம் உருவாகிக் கொண்டிருந்த பொழுது வெளிநாடுகளிலிருந்து ஏராளமான அளவில் உணவு இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. இதனால் நமது அந்நியச் செலவாணி சீர்குலைந்தது. ஆகவே, உணவுத் துறையில் சுயதேவை பூர்த்தியடைய வேண்டும் என்று பூரண உறுதியுடன் உழைத்தோம். அதன் பலனாக, 38 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி முதல் திட்டத்தில் 44 லட்சம் டன்னாகவும், இரண்டாவது திட்டத்தில் சுமார் 53 லட்சம் டன்னாகவும் அதிகரித்துள்ளது. தற்போது விளைச்சல் நல்ல நிலையிலுள்ள ஆண்டில் சுமார் 2 லட்சம் டன் உபரியாக இருக்கும்.

**விதைப் பண்ணைகள்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான விதைகளைப் பயன்படுத்த நமது உழவர்களில் பெரும்பாலோர் தவறி விடுகின்றனர். இதனால் உற்பத்திக் குறைவு உண்டாகிறது. இந்தக் குறையைப் போக்கும் பொருட்டு அரசாங்க விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. நிலவளம், நீர் வளம் போதிய அளவு இல்லாத காரணத்தினால் சில விடங்களில் இப் பண்ணைகள் கைவிடப்பட்டுள்ளன. எனினும், சுமார் 136 விதைப் பண்ணைகள் பலனளித்து வருவதாகக் கூறலாம். நிலச் சீர்திருத்தத்திற்குப் பின்னர் இவை மேலும் வளர வாய்ப்பு இருக்கின்றது.

உயர்வகை விதைகளை உபயோகப்படுத்துவதனால் 15 சதவீதம் அதிக உற்பத்தியை அடையலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பொழுது நமது மாநிலத்தில் 55 லட்சம் ஏகரா அளவில் நெல்லும், 56 லட்சம் ஏகரா அளவில் தானிய வகைகளும் பயிர் செய்யப்படுகின்றன. திட்டக் காலத்தில் 99,748 டன்கள் தரமான நெல் விதைகளும், 8,482 டன்கள் தரமான னைவகை விதைகளும் வழங்கப்பட்டன.

**பயிர்ப் பாதுகாப்பு.**—பயிரை அழிக்கப் பூச்சிகளும் பயிர் நோய்களும் பல முயல்கின்றன. அவற்றின் நாசத்திலிருந்து பயிரைக் காப்பாற்றக் குடியானவர்களுக்குச் சொந்தத்தில் நோய்க் கிருமி நாசினிகள் இருப்பது அவசியமாகும். ஆகையினால், இக்கருவிகளை வாங்கி அவர்களுக்குப் பாதி விலையில் அளிப்பதற்காக ஒரு திட்டம் தீட்டப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் 500 ஏகரா பரப்பில் பயிர் நோய் முன் தடுப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன. இதுவரை சுமார் 7,455 மருந்து தூவிகளும், 700 டஸ்டர்களும் உழவர்களுக்குப் பாதி விலையில் வழங்கப் பட்டுள்ளன. ஆண்டுதோறும் 3·35 லட்சம் ஏகரா நிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு அளிப்பது லட்சிய அளவாகக் கொள்ளப் பட்டது. மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில 900 ஏகரா பகுதியில் எலி ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**உரவகைகள்:**—ரசாயன உரத்தை முறை தெரிந்து அளவோடு உபயோகித்தால் விரைவில் நல்ல பலன் ஏற்படும். ஆகையினால், அமோனியம் சல்பேட்டுப் போன்ற ரசாயன உரங்களைப் பயன் படுத்த உழவர்களுக்குக் கடன் அளிக்கப்படுகிறது.

இவ்வகை ரசாயன உரத்தை மட்டும் நம்பி நமது உரத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள இயலாது. ஆகையினால், இதனுடன் இயற்கை உரத்தையும் சேர்த்துப் பயன்படுத்துவது மேலானது என்று கருதப்பட்டது. எனவே, இயற்கை உர வளத்தைப் பெருக்குவதற்காகப் பல்வேறு திட்டங்கள நிறை வேற்றப்பட்டு உள்ளன. பசுந்தழை உரத்தைப் பயன்படுத்தும் பழக்கம் நம் நாட்டில் பண்டுதொட்டே நிலவி வருவதாகும். இவ்வகை உரம் இடக்கூடிய நிலங்கள் 35 முதல் 40 லட்சம் ஏக்கர் வரை இருந்தபோதிலும், முதல் திட்டக்கால முடிவில் 10 லட்சம் ஏக்கரில்தான் பசுந்தழை உரம் பயன்படுத்தப் பட்டது. இந்த அளவை அதிகரிக்கச் செய்ய இரண்டாவது திட்டக் காலத்தில் தீர்மானிக்கப்பட்டது. 5,421 டன் பசுந் தழை உர வித்துக்கள் வழங்கப்பட்டது.

குப்பை, கூளம், மலம் முதலிய நகரக் கழிவுப்பொருள்கள் சிறந்த எருவாகும். அறுபத்தொரு நகராட்சி மன்றங்களும், 280 பெரிய பஞ்சாயத்துக்களும் இவ்வெருவைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. எருத் தயாரிப்பு இடங்கள்,

லாரிகள் முதலியன வாங்க இவைகளுக்குக் கடன் அளிக்கப் படுகிறது. உழவர்களுக்கு இந்த உரம் டன் ஒன்றுக்கு ரூ. 2க்கு மேற்படாத வகையில் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளில் 10 லட்சம் டன்களுககுமேல் வழங்கப் பட்டுள்ளது. இறுதி ஆண்டில் 4 லட்சம் டன்கள் அளிக்கப் படும். உள்ளூர் நகராண்மைக் கழகங்களுக்கு ரூ. 10 லட்சம் கடனாக வழங்கப்படும்.

சமுதாய நல வளர்ச்சிப் பகுதிகளில் நெல் லுமி, இலைச் சருகுகள், காளான், சாணம் முதலியவற்றைச் சரிவர உபயோ கித்து உரம் தயாரிக்கும் இயக்கமும் தீவிரம் அடைந்து உள்ளது. இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 81 வட்டாரங்களில் 1958–59ம் ஆண்டில் சுமார் 8 லட்சம் டன் எரு உற்பத்தி செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 156 வட்டாரங்களில் 1960—61-ல் 13·37 லட்சம் டன் எரு வழங்கப்பட்டது. மலச் சாக்கடைகளைப் பயன்படுத்தும் பெரிய பஞ்சாயத்துகளுக்கு மலக் கலவை எரு வளர்ச்சியின் பொருட்டு ரூ. 2,000 வரை கடன் வழங்கப்பட்டது. திட்டக் காலத்தில் பஞ்சாயத்துகளுக்குச் சுமார் ரூ. 19·81 லட்சம் வரை அளிக்கப்பட்டுள்ளது.

கிராமக் கலவை எருத் தயாரிப்பில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. கழிவுப் பொருள்களை வீணாக்காமல் சேகரித்துச் சிறந்த எருவாக்கிக்கொள்ளும் பாதையில் உழவர்கள் முன்னேறிச் செல்கிறார்கள். இதனை, ஒவ்வோர் ஆண்டும் இலக்கைக் காட்டிலும் மிஞ்சியுள்ள சாதனைகள் புலப்படுத்து கின்றன. இந்த உரங்கள் மண்வளத்தைப் பாதுகாப்பதுடன் மலிவாகவும் விளங்குகின்றன. இவற்றைச் செவ்வனே தயாரித்துப் பயன்படுத்தினால், விலை கூடுதலாகவும், கிடைப்பதற்கு அருமையாகவும் உள்ள ரசாயன உரங்களை எதிர்பார்த்து வருந்தவேண்டி வராது. ஆகையினால், ஒவ்வொரு கிராமத் திலும் 150 டன் எரு தயாரிக்கத் திட்டமிடப்பட்டது. திட்டக்கால இறுதியில் 100 கிராமங்களில் இத்திட்டம் நடத்தப் பட்டது.

விளைச்சலை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோ ளின் அடிப்படையில் இம் மாநிலத்தில் 1953-ம் ஆண்டில் ஜப்பானிய நெல் சாகுபடி முறை ஆரம்பிக்கப்பட்டது. வரிசை வரி சையாக நடுவது; ஊடு சாகுபடி செய்வது முதலியவை அந்த முறையின் சிறப்பான அம்சங்கள் ஆகும். முதல் திட்டக்கால

முடிவில் இம் முறைப்படி 8·84 லட்சம் ஏகரா அளவில் நெல் பயிரிடப்பட்டது. திட்டக்கால இறுதியில் 20 லட்சம் ஏகரா பரப்பில் இம்முறை கையாளப்பட்டது.

தமிழ் நாட்டில் "அகல உழுவதினும் ஆழ உழு" என்று ஒரு பழமொழி உண்டு. நிலத்தை ஆழமாக உழுவதினால் அதிகப் பலன் நிச்சயமாகக் கிடைக்கிறது. அதற்கு உறுதி வாய்ந்த இயந்திரக் கலப்பைகளும் புல்டோசர்களும் இருப்பின் மிகவும் அனுகூலமாக இருக்கும். ஆயின், இவற்றை ஏழை மக்களான உழவர்கள் வாங்கிப் பயன்படுத்துவது என்பது இயலக்கூடிய காரியம் அல்ல. இந்த வகையில் அவர்களுக்கு உதவியளிக்க அரசாங்கத்தார் முன் வந்தனர். தற்போது வேளாண்மைத் துறையினரிடம் 142 இயந்திரக் கலப்பைகள் உள்ளன. அவற்றில் 74 கலப்பைகளில் புல்டோசர்கள் இணைக்கப்பட்டுள்ளன. தரிசு நிலங்களை மீட்பதற்காக அவை உழவர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. திட்டக் காலத்தில் சுமார் 1,31,560 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டன. இயந்திரக் கலப்பைகள் ஏழாண்டுத் தவணைகளில் குடியானவர்களுக்கு வாடகைக் கிரய அடிப்படையிலும் கொடுக்கப்படுகின்றன. முதல் மூன்று ஆண்டுகளில் 43 இயந்திரக் கலப்பைகள் அளிக்கப்பட்டன. திட்டக் காலத்தில் 37,200 ஏக்கர் நிலங்கள் இதனால் பயனடைந்தன.

வயல்களின் மண்வளத்தைப் பாதுகாக்க வேண்டியதும் முக்கியமாகும். மண்வளத்தைப் பாதுகாப்பதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கச் செய்ய இயலும். சம உயரக் கரை கட்டுதல், தாவர அடைப்புக்களை ஏற்படுத்துதல் முதலான தடுப்பு முறைகளின் மூலம் மண் வளத்தைப் பாதுகாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நீலகிரி, வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு, சேலம் ஆகிய மாவட்டங்களில் இதுவரை சுமார் 78,000 ஏகரா பரப்பில் மண்வளம் பாதுகாக்கப்பட்டது எனலாம். திட்டக் காலத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் சுமார் 1,33,000 ஏகரா பரப்பில் மண் வளம் பாதுகாக்கப்பட்டது.

**தோட்டக்கலை வளர்ச்சி.**—பயன்தரும் மரங்களை வளர்த்துத் தோட்டக்கலையை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் நல்ல பலனை அடையலாம். இதற்காகப், புதிதாகத் தோட்டம் வைப்பவர்களுக்கு அரசாங்கம் ரூ. 300-ஐ நீண்ட காலக் கடனாக

அளிக்கிறது. இதைத் தவிரப் பழைய தோட்டத்தைப் புதுப்பிக்க ஏகரா ஒன்றுக்கு ரூ. 65 வீதம் குறுகிய காலக் கடன் கொடுக்கப்படுகிறது. தற்போது திம்மாபுரத்தில் ஒன்றும், பெரியகுளத்தில் ஒன்றுமாக இரண்டு பழத் தோட்டங்கள் உள்ளன. ஆண்டுதோறும் குறைந்தது 70,000 பழச் செடிகளை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. குற்றாலத்தில் பழத்தோட்ட—பழச் செடிப் பண்ணை நடந்தேறி வருகின்றது. தோட்டக்காரர்களுக்கு ஆறு மாதகாலப் பயிற்சியளிக்கும் திட்டம் ஒன்று, கோவை வேளாண்மைக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் 147 தோட்டக்காரர்கள் பயிற்சி பெற்றார்கள். பழங்களைப் பாதுகாக்கும் பொருட்டுப் பழ யூனிட்டுகளை ஏற்படுத்த அரசாங்கம் கடனளிக்கிறது. சென்ற ஆண்டில் ஆறு யூனிட்டுகளுக்கு ரூ. 30,000 கடனாக வழங்கப்பட்டது.

**எண்ணெய் வித்துக்கள்:**—வேர்க்கடலை, எள், ஆமணக்கு முதலிய எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை இரண்டாவது திட்டக் கால இறுதிக்குள் 1·66 லட்சம் டன் அதிகரிக்கச் செய்வதென நிர்ணயிக்கப்பட்டது. 1950–51-ல் 7·66 லட்சம் டன்னாக இருந்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி, நடப்பு ஆண்டில் 10 லட்சம் டன்னாக அதிகரித்தது.

**முந்திரி வளர்ச்சி.**—முந்திரிக்கு அமெரிக்காவில் அதிகத் தேவை இருக்கிறது. அதனை ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக அளவு டாலர் கிடைக்கும். இரண்டாவது திட்டக் காலத்தில் சுமார் 60,000 ஏகரா பரப்பில் முந்திரி சாகுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டது. திட்டக் காலத்தில் காட்டுப் பகுதிகளில் 47,381 ஏக்கர்களிலும், காடு அல்லாத பகுதிகளில் 5,650 ஏக்கர்களிலும் முந்திரி அபிவிருத்தி செய்யப்பட்டது.

**அரக்கு வளர்ச்சி.**—அரக்கும் அந்நியச் செலவாணி ஈட்டும் பொருள் ஆகும். ஆகையினால் அரக்கு வளர்ச்சியிலும் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. மதுரை, கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் 9 இடங்களில் அரக்குப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரக்குப் பற்றும் மரங்கள் 325 நடப்பட்டன. 2·51 லட்சம் பவுண்டு அரக்கு உற்பத்தியாயிற்று.

**கரும்பு வளர்ச்சி.**—இரண்டாவது திட்டக் காலத்தில் கரும்பு உற்பத்தியை 10 லட்சம் டன் அதிகரிக்கச் செய்யவேண்டும்

என்பது லட்சிய அளவாகும். இதனால் சர்க்கரை உற்பத்தி 50,000 டன் அதிகரிக்கும். நெல்லிக்குப்பம், புகளூர், பாண்டிய ராஜபுரம் ஆகிய ஊர்களில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்குச் செல்லும் பாதைகளைச் செப்பனிட 18 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. வடபாதிமங்கலம், போட்டவாத்தலை, ஆம்பூர் சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் பாதை வளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும், குடியாத்தத்தில் உள்ள சர்க்கரை ஆராய்ச்சி நிலையத்தில் நல்லரக வெல்லம் தயாரிக்க ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. வெல்லக் கிடங்கும், ஆய்வுக் கூடமும் கட்டப்பட்டு வருகின்றன. கடலூரில் மத்தியக் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றும், குமாரமங்கலத்திலும் குடியாத்தத்திலும் இரண்டு கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன.

**பருத்தி வளர்ச்சி.**—நமது மாநிலத்தில் தேவைக்கேற்ற அளவில் பருத்தி உற்பத்தி செய்யப்படவில்லை. ஆகையினால் 1960–61 முடிவுக்குள் லிண்ட் பஞ்சு 1·55 லட்சம் பேல்கள் அதிகம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டது. 1958–59 பருத்திப் பருவ காலத்தில் 64,755 பேல் பருத்தி அதிக உற்பத்தி செய்யப்பட்டது. திட்டக் காலத்தில் 1·20 லட்சம் பேல்கள் அதிக உற்பத்தி செய்யப்பட்டன.

**தென்னை வளர்ச்சி.**—இந்தியாவில் தேங்காய்கள் உற்பத்தி பற்றாக்குறையாக இருக்கின்றது. அதனை ஈடுசெய்யக் கொப்பரையும், எண்ணெயும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இரண்டாவது திட்டக்கால முடிவில் தேங்காய் எண்ணெய்ப் பற்றாக்குறை 8,000 டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே தென்னை வளர்ப்பில் அதிகக் கவனம் செலுத்துவது அவசியம் ஆகிறது. தென்னை வளர்ப்பு, எரு விடுதல் ஆகியவை பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காகத் தஞ்சை மாவட்டம் வேப்பங்குளத்தில் ஓர் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை, திண்டிவனம், கன்னியாகுமரி, செங்கோட்டை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஐந்து நாற்றங்கால்கள் இயங்கி வருகின்றன. ஆண்டுதோறும் தரமான 126,000 தென்னம்பிள்ளைகளை வழங்கும் அளவுக்கு அவை விரிவுபடுத்தப் பட்டுள்ளன. திட்டக் காலத்தில் மொத்தம் 3·44 லட்சம் தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டன. தென்னை மரத்தைப் பீடிக்கும் ஒரு வகைக் கருப்புக் கம்பளிப் பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்காகக் குடியாத்தம், நாகர்கோயில் ஆகிய இரு இடங்களிலும்

ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தின் தென் பகுதியிலுள்ள ஒடுக்க மான கடலோரப் பகுதியில் தென்னம்பிள்ளை வளர்ப்புக்கு ஏற்ற வசதி இருக்கிறது. ஆகையினால், 47 குடும்பங்களுக்கு 235 ஏகரா நிலம் வழங்கப்பட்டது. இதில் 7,855 தென்னம் பிள்ளைகள் நடப்பட்டன. நீண்ட காலக் கடனாக சுமார் ரூ. 1 லட்சம் கொடுக்கப்பட்டது. உபயோகமற்ற சதுப்பு நிலங்களை மீட்டு அவற்றில் தென்னை மரங்களை வளர்க்க ஒரு திட்டம் தீட்டப் பட்டுள்ளது. திண்டிவனம் வட்டத்தில் கழுவேலிச் சதுப்புப் பிரதேசத்தில் 3,000 ஏகரா பரப்பில் தென்னம் பிள்ளைகள் வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவை பத்தாண்டுகளில் பலன்தர ஆரம்பித்தால், 13·5 லட்ச ரூபாய் மதிப்புள்ள 90 லட்சம் தேங்காய்கள் கிடைக்கும்.

**புகையிலை வளர்ச்சி.**—'மீனம்பாளையம்' புகையிலை கோயம் புத்தூர் மாவட்டத்தில் விளைகிறது. மண்வளம், கிணற்றுத் தண்ணீரின் தன்மை இவற்றால் அதன் ருசியும் தரமும் உயர்வாக உள்ளன. இந்தப் புகையிலையின் வளர்ச்சிக்கான ஆராய்ச்சிகள் பவானிசாகரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் புகையிலை பயிராகும் பரப்பை 1000 ஏகராவாக அதிகரிக்கச் செய்யத் திட்டமிடப்பட்டது. 556·58 ஏக்கர்களில் பயிரிடப்பட்டது. புகையிலை தயாரிக்கும் முறைகளை விஞ்ஞான முறையில் புகையிலை பயிரிடுபவர்களுக்குச் செயல் முறைக் காட்சிகள் மூலம் விளக் குவதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

**வேளாண்மைக் கல்வி.**—வேளாண்மைத் துறைத் திட்டங்களை நிறைவேற்றப் போதிய பயிற்சியாளர்கள் தேவையாக இருப்பதனால், கோவையிலுள்ள வேளாண்மைக் கல்லூரியின் மாணவர் எண்ணிக்கை 108 லிருந்து 162 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. அந்தக் கல்லூரியில் புள்ளி விவரப் பிரிவு ஒன்றும், எக்ஸ்ரே யூனிட் ஒன்றும், ஆய்வுக்கூடம் ஒன்றும் அமைக்கப்படும். மேல் படிப்பு முறையிலும் கல்லூரி வளர்ச்சி யடைந்துள்ளது. தோட்டக்கலை, செடி நோய்நூல், செடி வளர்த்தல் ஆகிய துறைகளில் மேல் பட்டப் படிப்புக்காக 1958–59-ல் 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். எதிர்காலத்தில் வேளாண்மை நூல், பூச்சியின நூல், வேளாண்மைப் பொருளாதாரம் ஆகிய பாட முறைகளில் மேல் படிப்பு ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை பற்றிய தகவல்களை உழவர்களுக்கு வழங்குவதில் வேளாண்மைத் துறை முனைப்பாக இருக்கிறது. பிரசுரங்கள், சினிமாப் படங்கள், கண்காட்சிகள் மூலம் பிரசாரம் செய்கிறது. உழவர்களுடன் தொடர்பு பற்றிக் கிராமத் தொண்டர்களுக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. வேளாண்மைக் கல்வி சம்பந்தமான திரைப்படக் காட்சியும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**வெற்றிலைக்கொடி வியாதிபற்றி ஆராய்ச்சி.**—வெற்றிலைக் கொடிக்கு ஏற்படும் வியாதியின் காரணமாக வெற்றிலை பயிரிடுவோருக்கு ஏராளமான இழப்பு நேர்கிறது. அதனால், சேலம் மாவட்டத்தில் வெள்ளூர் அருகில் போத்தனூரில் குத்தகை நிலம் ஒன்றில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பயிர் நோய்க் கிருமி நாசினிகள் உபயோகிக்கப் பட்டன. மாதம் ஒருமுறை போர்டோ கலவையை மண்ணில் தூவும் முறை சிறந்ததென அறியப்பட்டது. சென்ற ஆண்டிலும் பல சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**வாழை ஆராய்ச்சி,**—ஆடுதுறையில் மத்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைந்துள்ளது. அங்கு 176 வாழை வகைகள் இருக்கின்றன. வாழை வகைகளைத் தேர்ந்தெடுத்தல், மாற்றி மாற்றிப் பயிரிடுதல், நல்ல முறையில் எருவிடுதல், வாழைக் கன்றுகளைப் பாதுகாத்தல் முதலான பல செயல்களைக் குறித்து இங்கே ஆராய்ச்சி நடைபெற்றது.

## 2. பாசனம்

**பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள்.**—முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்தில் 9 பாசனத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றின் லட்சியம், 3,34,200 ஏகராவுக்குப் புதிதாகப் பாசன வசதி அளிப்பதும், ஏற்கனவே உள்ள 1,30,000 ஏகராவுக்கு நிலையாகத் தண்ணீர் வசதி யளிப்பதும் ஆகும். இவைகளுக்கான மொத்தச் செலவு ரூ. 28·91 கோடியாகும்.

முதல் திட்டக் காலத்தில் கீழ் பவானி, மேட்டூர்க்கால் வாய்த் திட்டங்களினால் 1,31,621 ஏகரா நிலங்களுக்கு நீர் அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் ஏற்கனவே எஞ்சி நின்ற வேலைகள் முடிக்கப்பட்டதுடன், ரூ. 16 கோடி செலவில் புதிய பாசனத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து நிறைவேற்றப்படும் திட்டங்களாலும், புதிய திட்டங் களாலும், 2·92 லட்சம் ஏகரா நிலங்கள் பயனடைய வேண்டும் என்பது லட்சியம். இதுவரை 2·63 லட்சம் ஏக்கர்கள் பாசன வசதி பெற்றுள்ளன.

**மணிமுத்தாறு நீர்த்தேக்கம்.**—சுமார் 500 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த நீர்த்தேக்கம் 55,000 லட்சம் கன அடி நீர் கொள்ளத் தக்கது. இதன் மூலம் ஏற்கனவே தாம்பிரவருணியின் பல கால்வாய்களின் ஆயக் கட்டில் உள்ள 83,000 ஏகரா நிலங்கள் மேலும் பாசனம் பெறுகின்றன. இதன் ஒரு கால்வாய் மூலம் 300 ஏரிகள் நீர்பெற்று, 20,000 ஏகரா நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கின்றன.

**மேட்டூர்க் கால்வாய்.**—இரண்டு கால்வாய்களின் மூலமாகச் சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் மொத்தம் 45,000 ஏகரா நிலங்கள் 1959-ம் ஆண்டிலிருந்து பாசன வசதி பெறு கின்றன. இந்தக் கால்வாய்த் திட்டத்தின் செலவு மதிப்பீடு ரூ. 183 லட்சமாகும்.

**ஆரணியாறு நீர்த்தேக்கம்.**-ஆரணியாற்றில் அணைக்கட்டும், இரு புறங்களிலும் இரண்டு கால்வாய்களும், சூரத்தபல்லி என்ற இடத்தில் ஓர் அணைக்கட்டும் அமைக்க வேண்டும் என்பது

திட்டத்தின் லட்சியம். சூரத்தபல்லி அணைக்கட்டு இப்பொழுது பலனளித்து வருகின்றது. இதன் கீழ் ஓரிடத்தில் ஆரம்பமாகும் கால்வாயின் மூலம் புதிதாக 2,500 ஏகராவும், தற்போதுள்ள 9,066 ஏகராவும் பாசனம் பெறும்.

இக் கால்வாய் நமது எல்லேக்குள் வருகிறது. மாநிலப் புனரமைப்பின் காரணமாக, ஆரணியாறு திட்டம் ஆந்திரப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் ஆன செலவு ரூ. 25·43 லட்சம்.

**அமராவதி நீர்த்தேக்கம்.**—நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 40,000 லட்சம் கன அடி. இடப்பக்கமாக 40 மைல் நீளக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. அதன் மூலம் புதிதாக 21,500 ஏகரா புன்செய்ப் பயிர்கள் பாசன வசதி பெறுகின்றன. ஏற்கனவே ஆயக்கட்டில் உள்ள 32,000 ஏகராவுக்கும் தண்ணீர் கிடைக்கிறது. இதற்கான செலவு மதிப்பீடு ரூ. 329·28 லட்சம்.

**வைகை நீர்த்தேக்கம்.**—ரூ 330 லட்சம் செலவில் கட்டப் பட்டுள்ள இந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 68,000 லட்சம் கன அடி. புதித்ாக 20,000 ஏகராவுக்குப் பாசன வசதியளிப்பது நோக்கம். இதுவரை சுமார் 18,818 ஏகரா நிலங்கள் நீர் வசதி பெற்று உள்ளன.

**சாத்தனூர் நீர்த்தேக்கம்.**—சாத்தனூரில் பொன்னியாற்றின் குறுக்கே 46,000 லட்சம் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக் கம் ஒன்றும், அதன் கீழ் 4½ மைல் தொலேவில் அதே ஆற் றின் குறுக்கே ஒரு சிறிய அணேயும் அமைக்கப்பட்டுள்ளன. செலவு மதிப்பீடு ரூ. 289 லட்சம். 21,000 ஏகரா நிலங்கள் பலனடைகின்றன.

**கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்.**—ரூ. 202 லட்சம் செலவில் கட்டப்பட்ட இந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 24,000 லட்சம் கன அடி. 9,000 ஏகரா நிலத்துக்குப் பாசனமளிப்பது லட்சிய அளவு. சென்ற ஆண்டிலிருந்து 9,000 ஏகரா நிலங்கள் பலன டைந்து வருகின்றன.

**புதிய கட்டளே உயர் மட்டக் கால்வாய்.**—இந்தக் கால்வாயின் நீளம் 86 மைல். 20,622 ஏகரா நிலத்துக்குப் பாசனம் அளிக்கவேண்டும் என்பது லட்சியம். 1959-ம் ஆண்டிலிருந்து 4,000 ஏகர் நிலம் பாசனம் பெற்று வருகின்றது. இதன் உத் தேசச் செலவு ரூ. 172·29 லட்சமாகும்.



வீடூர் நீர்த்தேக்கம்

**புள்ளம்பாடி கால்வாய்.**—இந்தக் கால்வாயின் நீளம் 54 மைல். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த லால்குடி, உடையார் பாளையம் வட்டங்களில் 21,114 ஏகரா இதனால் நன்மையடையும். 1959-ம் ஆண்டிலிருந்து 5,000 ஏகரா நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. இதன் செலவு மதிப்பீடு ரூ. 157 லட்சம்.

**வீடூர் நீர்த்தேக்கம்.**—ரூ. 67·49 லட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ள இந்நீர்த் தேக்கத்தினால், பாண்டிச்சேரியில் 1,000 ஏகரா நிலமும், தமிழ் நாட்டில் 2,200 ஏகரா நிலமும் பாசன வசதி பெறும். 1959-ம் ஆண்டில் 700 ஏகரா நிலம் நீர்வளம் பெற்றது. நடைமுதல் ஆண்டில் 2,500 ஏக்கர்களுக்குப் பாசனம் அளிக்கப் பட்டது. செலவு மதிப்பீடு ரூ. 67·49 லட்சம். இதனைத் தமிழ் நாடும், பாண்டிச்சேரி மாநிலமும் 11 : 5 என்ற விகிதத்தில் ஏற்கும்.

**நெய்யாறு இரண்டாம் நிலை.**—நெய்யாறு ஆற்றின் இடக் கரையில் கால்வாய் அமைக்கும் பணியே இத்திட்டமாகும். அக் கால்வாய் 24 மைல் கேரளத்தில் ஓடி, அதன் பின்னர் தமிழ் நாட்டில் ஓடுகிறது. நமது மாநிலத்தில் உள்ள கால்வாய்ப் பகுதியை அமைக்க ரூ. 41 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்

கால்வாய் கட்டி முடிக்கப்பட்டால், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவன்கோடு வட்டத்திலுள்ள சில பகுதிகள் பலனடையும். புதிதாக 7,200 ஏகரா சாகுபடியின் கீழ் வருவதுடன், நமது மாநிலத்திலுள்ள நன்செய் ஆயக்கட்டைச் சேர்ந்த 2,000 ஏகரா நிலையாகப் பாசன வசதி பெறும்.

**பரம்பிக்குளம் ஆளியாறு:**—நமது மாநிலத்தின் பாசன வசதிகளைப் பெருக்கும் முயற்சியில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டமாகும். இதற்கான விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு நீர்—விசை கமிஷனுக்கு அனுப்பப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தின் தென் பகுதியைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் மேற்கு நோக்கி ஓடும் சோலையாறு, பரம்பிக்குளம் ஆறு முதலிய ஆறுகளை அணையிட்டுத் தடுத்து மலைகளைக் குடைந்து தண்ணீரைக் கிழக்கே திருப்பிக் கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, தாராபுரம், பல்லடம் முதலிய வட்டங்களிலுள்ள சுமார் 2·4 லட்சம் ஏகரா நிலங்களுக்குத் தண்ணீர் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். இத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் தண்ணீரை எல்லாப் பகுதிகளுக்கும் நியாயமான முறையில் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்பதே அரசியலாரின் கொள்கை.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் பாசன வசதிகள் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், 180,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும் வசதி ஏற்படும். இத் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதைப்பற்றிக் கேரள அரசினருடன் சுமுகமான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாகவே இத் திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. இத்திட்டத்தின் மொத்த உத்தேசச் செலவு ரூ. 30 கோடியாகும். பூர்வாங்க வேலைகள் 1958 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டன. 1960–61-ல் பரம்பிக்குளம், துணைக் கடவு, திருமூர்த்தி மலை ஆகிய இடங்களில் தேக்கங்கள் கட்டப்படும்.

**கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நடுத்தரப் பாசனத் திட்டங்கள்:**—கொடையாறு அணைக்கட்டிலிருந்து புறப்படும் கால்வாய்களாகிய இடக்கரைக் கால்வாய், தோவளக் கால்வாய், ஆனந்தனாறு, பத்மநாபபுரம்—புத்தனூர் கால்வாய் ஆகிய நான்கு கால்வாய்களை 13 லட்சம் ரூபாயில் செப்பனிடும் வேலை திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. தோவளா, அகஸ்தீஸ்வரம், கால்குளம் வட்டங்களிலுள்ள ஏரிகள் புதுப்பிக்கப்பட்டுத் தூர் வாரப்பட்டன.

**சிறுபாசனத் திட்டங்கள்.**—பெரிய பாசனத் திட்டங்களை நிறை வேற்ற வேறு ஆறுகள் இல்லாத நிலையில், சிறுபாசனத் திட்டங் களில் தீவிர கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவற்றின் பொருட்டு ரூ. 341·66 லட்சம் ஒதுக்கப்பட்டது. விசேஷ சிறு பாசனத் திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் ரூ. 10 லட்சத்திற்குக் குறை வாகப் பிடிக்கும் பல வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. திட்டக் காலத்தில் 2,170 வேலைகள் முடிக்கப்பட்டு உள்ளன.

**பாசன ஏரிகளில் தூரெடுத்தல்.**—நாளான ஏரிகளில் தூர் சேர்ந்து மண்மேடிட்டுப் போகிறது. அத்தகைய ஏரிகளில் பாதி யளவுக்குத் தூர்வாரியும், பாதியளவுக்கு முழுத் தண்ணீர் மட்டத்தை உயர்த்தியும் அவற்றை நல்ல நிலைக்குக் கொண்டு வரலாம். மண் அகற்றும் பெரிய இயந்திரங்களின் மூலம் தூர்வாரும் வேலை நடைபெற்றது. இரண்டாவது திட்டக் காலத் தில் இத்திட்டத்தின் மூலம் 47 குளங்கள் 36·44 லட்ச ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டன.

**வடிமுனைக் கிணறுகளை இறக்குதல்.**—ஆண்டுதோறும் 600 வடிமுனைக் கிணறுகளை இறக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 47·5 லட்சம் ஒதுக்கப்பட்டது. கிணறு ஒன்றுக்கு ரூ. 2,500 வீதம் கடனளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. திட்டக் கால முதல் மூன்றுண்டுகளிலேயே 1,472 கிணறுகள் இறக்கப் பட்டன. திட்டக் காலத்தில் 2,694 கிணறுகள் இறக்கப்பட்டன. இவற்றல் 26,940 ஏக்கர்கள் பயனடைந்தன.

**கிணறு மானியம்.**—குறைந்த அளவு ஒரு ஏகரா ஆயக்கட்டை உடைய குடியானவருக்குக் கிணற்று மானியமாக 250 ரூபாய் என்னும் வரையறைக்குட்பட்டு 25 சத வீதம் உதவித்தொகை யளிக்கப்படுகிறது. நில வளர்ச்சிக் கடன் சட்டத்தின் கீழ் முதற் கண் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை கடனாகக் கொடுக்கப்பட்டு, கிணற்று வேலை முடிந்ததும், மானியத் தொகை கழிக்கப்படுகிறது. திட்டக் காலத்தில் 6,000 கிணறுகள் வெட்ட ரூ. 90 லட்சம் செலவிடப்பட்டது.

**பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் இணைத்தல்.**—மின்சாரத்தைப் பயன்படுத்தித் தண்ணீர் இறைப்பதன் மூலம் பாசன வசதிகளைப் பெருக்குவதற்கும் பெரிய அளவில் திட்டம் நிறைவேற்றப்பட் டிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 32,440 பம்புகளுக்கு மின்சார வசதி கிடைத்திருந்தது. ஆயின், தற்போது 1,16,000 பம்பு செட்டுகள் மின் சக்தியினுல் இயங்குகின்றன.

**எண்ணெய் எஞ்சின்களும் மின்சார மோட்டார்களும்.**—ஏழை, நடுத்தர உழவர்களுக்குத் தற்பொழுது எண்ணெய் எஞ்சின்கள் 290 யூனிட்டுகள் வாடகை அடிப்படையில் கிடைக்கின்றன. இவற்றின் மூலம் திட்டக் காலத்தில் 47,117 ஏகரா பாசன வசதி பெற்றது. எண்ணெய் எஞ்சின்களும், மின்சார மோட்டார்களும் வாடகைக் கிரயத் திட்டத்தின் கீழும் குடியானவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அவர்கள் அந்தத் தொகையைச் சம தவணைகளில் 3 முதல் 7 ஆண்டுகளில் செலுத்தலாம். கடந்த ஐந்தாண்டுகளில் 559 எண்ணெய் எஞ்சின்களும், 1,675 மின்சார மோட்டார்களும் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நமது மாநிலத்தில், குழாய்க் கிணறுகள் தோண்டும் திட்டம் பரீட்சார்த்தமாக மத்திய அரசாங்கத்தினரால் ஆரம்பிக்கப் பட்டது. இந்தக் குழாய்க் கிணறுகள் வெட்டுவதில் அதிகச் செலவு ஏற்படுகிறது; தண்ணீர் இறைப்பதற்கும் செலவு அதிகம். திட்டக் காலத்தில், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சுமார் 75 ஊற்று நீர்க் குழாய்க் கிணறுகள் இறக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றுக்கும் செலவு சுமார் ரூ. 20,000 ஆகும்.

# 3. விலங்குச் செல்வம்

விலங்குச் செல்வங்கள் உழவர்களின் நல்ல தோழர்களாக விளங்குகின்றன. நமது பொருளாதாரத்திலும் சிறப்பான அங்கம் பெற்றுத் திகழ்கின்றன. "பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப் பசுமிக நல்லதடி பாப்பா" என்று பாரதியாரும் பசுவின் சிறப்பைப் பாடி மகிழ்ந்தார். 'மாடு' என்ற சொலலே பழங்காலத்தில் செல்வத்தைக் குறித்து வந்தது. மாடுகள், ஆடுகள் முதலான விலங்குச் செல்வங்களின் வளர்ப்புக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 216·18 லட்சம் ஒதுக்கப்பட்டது.

விலங்குச் செல்வங்களைப் பாதுகாத்து நலமாக வாழ்விக்கும் பொருட்டுக் 'கேந்திரக் கிராமத் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டது. விஞ்ஞான முறையில் விலங்குகளை இனப் பெருக்கு செய்தல், தீனி போடுதல், நோய்க் கட்டுப்பாடு செய்தல் முதலிய வழி வகைகளைப் பின்பற்றி, விலங்குச் செல்வங்களை வலிவும் பொலிவும் உள்ளவையாகப் பல்கிப் பெருக வைக்கவே இத்தகைய கேந்திரக் கிராமத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் நிலையங்கள் 16 நிறுவப் பட்டன. அவை ஒவ்வொன்றுடனும் 2 கேந்திரக் கிராமங்கள் இணைக்கப்பட்டன. இரண்டாவது ஐநதாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் 23 நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றுடனும் 6 கேந்திரக் கிராமங்கள் இணைக் கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு திட்டக் காலங்களிலும் விலஙகுச் செல்வங்களின் வளத்தைப் பெருக்குவதற்காகப் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றால் 234 கேந்திரக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமங்களில் மட்டும் அல்லாமல், நகரங்களிலும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் நிலையங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. நிறுவப்பட்ட நிலையங்கள் நல்ல முறையில் பணியாற்றி வந்ததால், திட்டக் காலத்தில் 19 நிலையங்கள் தொடங்கப்பட்டன.

விலங்குச் செல்வப் பண்ணைகளில் பாசன வசதிகளை அதிகப் படுத்துவதன் மூலம், விலங்குச் செல்வங்களுக்கு வேண்டிய தீனி தட்டுப்பாடின்றிக் கிடைக்கும். கடந்த மூன்றுண்டுகளில் ஹொசூர் விலங்குச்செல்வப் பண்ணையில் 4 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. சென்ற ஆண்டிலும் கிணறுகள், வாய்க் கால்கள் வெட்டப்பட்டதுடன், ஏரிகளில் தூரும் வாரப் பட்டது. 1,500 ஏகரா பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணி தொடங்கப்பட்டது. மேலும், ரூ. 70,000 செலவில் மின்சார வசதி செய்துதரப்பட்டது. பண்ணைப் பணியாளர் களுக்கு வேண்டிய வீடுகளும், சென்னை விலங்கு மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களுக்கு வேண்டிய வீடுகளும் கட்டப்படுகின் றன.

ஓரத்த நாட்டிலுள்ள விலங்குச் செல்வப் பண்ணையில் சாமான்கள் அறையும், இளைப்பாறும் விடுதியும் 1956–57-ல் கட்டப்பட்டன. பால் கறக்கும் கொட்டில்கள், பால் பொருள்கள் அறை, கோழிப் பண்ணை அறை முதலானவை 1958–59-ல் கட்டி முடிக்கப்பட்டன. இங்குப் பலவகைக் கட்டிடங்களும் கட்டப்படுவதற்காக ரூ. 2·48 லட்சம் ஒதுக்கப் பட்டது.

செட்டி நாட்டில் 1,600 ஏகரா பரப்பில் ஒரு புதிய விலங்குச் செல்வப் பண்ணை நிறுவப்பட்டது. 1400 ஏக்கர் பரப்பு மேய்ச்சல் நிலங்களாக அமைக்கப்பட்டு உள்ளது. தற்காலிக மான கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. கம்பிவேலி போடப் பட்டுள்ளது. இப் பண்ணையில் 666 விலங்குச் செல்வங்கள் உள்ளன.

இவை தவிர, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நான்கு பசுப் பாதுகாப்பு நிலையங்கள் நிறுவத் தீர்மானிக்கப்பட்டது. கட்டிடம், கொட்டில்கள் முதலிய வற்றைச் செப்பனிடும் செலவுக்காக ரூ. 5,000 மூலதன மானியமும், பிராணிகள் வளர்ப்புக்காக ரூ. 2,000 நடை முதல் மானியமும் அளிக்கப்படும். ஈன்று வளர்க்கப்படும் கன்றுகளுக்கும் உதவித்தொகை யளிக்கப்பட்டது. ஆலத்தம் பாடி, வேதாரண்யம் ஆகிய இடங்களில், பசுப் பாதுகாப்பு நிலையங்கள் இருந்தன. அடுத்து வழிவலம், திருப்புகலூர் ஆகிய இடங்களில் மற்ற இரு நிலையங்களும் அமைக்கப்பட் டுள்ளன.

விலங்குச் செல்வங்களின் தீனிப் பயிர்களை அதிகமாகப் பயிரிடுவதை ஊக்குவிக்க ஒரு திட்டம் 1958–59-ல் கொண்டு வரப்பட்டது. செட்டி நாட்டிலும், புதுக்கோட்டையிலும் உள்ள மாவட்ட விலங்குச் செல்வப் பண்ணைகளில் புல்வெளியை வளர்ச்சியடையச் செய்யும் வேலை முடிக்கப்பட்டது. இத் திட்டத்தில் அக்கறை கொண்டுள்ள தனிநபர்களின் நிலங்களில் கூட இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

பத்து ஏகரா பரப்பளவு கொண்ட 5 செயல் முறைப் புல் வெளிகளை நிறுவ, ஒரத்த நாட்டிலுள்ள மாவட்ட விலங்குச் செல்வப் பண்ணைக்கும் சின்ன சேலத்திலுள்ள ஆட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்துக்கும் 1959–60-ல் அனுமதி வழங்கப்பட்டது. இம்மாதிரி ஐந்து புல்வெளிகளை நிறுவிக் கொள்ள இன்னும் இரண்டு விலங்குச் செல்வப் பண்ணைகள் அடுத்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டன. இவற்றுக்கு உதவித் தொகையும், விதைகளும் வழங்கப்பட்டன.

செயற்கைக் கருத்தரிக்கும் முறைப்படி கேந்திரக் கிராமங் களில் ஈன்று வளர்க்கப்பட்ட காளைகளை மற்றப் பகுதிகளில் இன வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள 46 துணை வளர்ச்சி நிலையங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொன்றிலும் 50 காளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. வளர்க்கும் பொருட்டுக் காளை யொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் அளிக்கப்பட்டது. 1959-ல் இவ் வகை நிலையங்கள் சுமார் 29 இருந்தன. அவற்றிலிருந்த காளைகள் 1,450. மூன்று ஆண்டுகளில் 10,536 கன்றுகள் ஈன்று வளர்க்கப்பட்டன. 1960–61-ம் ஆண்டில் 17 துணை வளர்ச்சி நிலையங்கள் நிறுவப்பட்டன.

கன்றுகள் மிகச் சிறு பிராயத்தில் இருக்கும்போதே அவற்றைச் சொந்தக்காரர்கள் விற்றுவிடுவது உண்டு. ஆகவே, பருவம் அடையும்வரை அவற்றைப் பாதுகாக்கச் சொந்தக்காரர்களுக்குக் கன்று ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் அளிக்க அரசியலார் முன் வந்தனர். திட்டக் காலத்தில் 7,000 கன்று களுக்கு உதவத் தீர்மானிக்கப்பட்டது. இதுவரை சுமார் 6,000 கன்றுகளுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளில் பசுக்களுடனும், கறவை எருமைகளுட னும் சேருவதற்காகப் பொலிகாளைகளை வழங்கத் திட்டமிடப் பட்டது. 1956-57-ல் 60 பொலி காளைகள் வழங்கப்பட்டன.

விலங்குச் செல்வங்களைப் பீடிக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த மாவட்டம் ஒன்றுக்கு ஓர் இயங்கும் மருத்துவ நிலையம் வீதம் நிறுவத் தீர்மானிக்கப்பட்டது. மோட்டார் வண்டிகள் மூலம் மருந்து வகைகள் கொண்டு செல்லப்பட்டுச் சிகிச்சை யளிக்கப்படும். இதுவரை 18 நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

விலங்குச் செல்வங்களைப் பீடிக்கும் கோமாரி என்னும் நோயைத் தீர்க்கக் கெட்டியான ஊனீர் தேவைப் படுகிறது. ஆகையினால், அதிகமாக 74 லட்சம் டோஸ் அளவு கொண்ட ஊனீர் தயாரிக்கத் திட்டமிடப்பட்டது. 1958–59-ல் 92 லட்சம் டோஸ் ஊனீர் தயாரிக்கப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் மேலும் 148 லட்சம் டோஸ் தயாரிக்கப் பட்டது.

**ஆட்டுப் பண்ணை.**—இறைச்சி தரும் ஆட்டுவகையை வளர்ப் பதன் பொருட்டுச் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த காட்டுப் பாக்கத்தில் 515 ஏகரா பரப்பளவில் ஓர் ஆட்டுப் பண்ணை ஏற் படுத்தப்பட்டுள்ளது, ஹொசூர் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தி லிருந்து ஆடுகள் கொண்டுவரப்பட்டன. திட்டக்கால இறுதியில் இங்கு 256 ஆடுகள் இருந்தன. பெரும்பாலான கட்டிடங்கள் முடிக்கப்பட்டுவிட்டன. மற்ற வேலைகள் நடைபெற்று வரு கின்றன.

நேர்த்தியான கம்பளிக்காகவும், அதிக இறைச்சிக்காகவும் 16 ஆட்டு வளர்ச்சி நிலையங்கள் மாநிலம் முழுவதும் நிறுவப் பட்டன.

**கோழிப் பண்ணை.**—இரண்டாவது திட்டக் காலத்தில் கேந்திரக் கிராமப் பகுதிகளில், 20 கோழி தரப்பிரிவு நிலையங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டது. ஒவ்வொரு நிலையத்துக்கும் நாட்டுக் குஞ்சுகளுக்குப் பதிலாக அயல் நாடுகளிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்ட சேவற்குஞ்சுகள் பகிர்ந்து அளிக்கப்படும். அப் பகுதியிலுள்ள சேவற்குஞ்சுகள் ஆண்மை அழிக்கப்படும். முட்டை பொரிக்க அடைகாப்புக் கருவிகள் வழங்கப்படும். இருபது நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

சமுதாய நல வளர்ச்சிப் பகுதிகளில் கோழிப்பண்ணை வளர்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் நோக்கங் களாவன :—(1) தற்போதுள்ள அரசாங்கக் கோழிப் பண்ணை களில் குஞ்சுகளை 5 மாதங்கள் வரை வளர்த்து, பிறகு அவற்றைத் தீவிர வளர்ச்சிப் பகுதிகளிக்குச் சலுகைக் கட்டணங்களில் மூன்று

மூன்றுசப் பங்கிடுதல்; (2) நூறு கோழிகள் என்ற அடிப்படை இருப்புடன் சமுதாய வளர்ச்சி, தேசிய நலவளர்ச்சிப் பகுதிகளில் கோழிப்பண்ணை வளர்ச்சி நிலையங்களை நிறுவுதல்; (3) கோழி வளர்ப்பில் ஆறு வாரங்களுக்குப் பயிற்சியளித்தல்; (4) கோழி வளர்ப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கம்பி வலைகள் வழங்குதல்; (5) கோழிப் பண்ணைக் கண் காட்சிகள் நடத்துதல். இம்மாதிரி வளர்ச்சி நிலையங்கள் இது வரை 28 நிறுவப்பட்டுள்ளன. 253 பேர் கோழி வளர்ப்பில் ஆறு வாரகாலப் பயிற்சி பெற்றுள்ளனர்.

கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும், சாதனங்கள், கம்பி வலைகள் முதலியவற்றின் செலவுக்காக அதிக அளவு ரூ. 850 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. 1957-58-ல் 21 நபர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டது. திட்டக்கால இறுதியில் 75 நபர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும், விலங்குச் செல்வங்களின் சிறப்பையும், அவற்றை வளர்க்கும் முறையையும் மக்கள் மனத்தில் பதிய வைப்பதற்காக மாநில அளவில் ஒரு கண் காட்சியும், மாவட்ட அளவில் ஆறு கண் காட்சிகளும் நடத்தப்பட்டிருக்கின்றன.

விலங்கு மருத்துவக் கல்லூரியின் மாணவர் தொகை 120 ஆக உயர்த்தப்பட்டது. மூன்று மாடிக்கட்டிடமும் அமைக்கப் பட்டது. வழ வழப்பான தள வரிசைகள் அமைத்துச சாக்கடை களுக்கு மூடியிடும் வேலை நிறைவேறி உள்ளது.

நோய் தீர்ப்புக் கலை, நஞ்சு நூல், கைனகாலஜி ஆகிய துறை களில் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

விலங்கு மருத்துவக் கல்வியில், மேல் பட்டப் படிப்பு முறை மேனாட்டுக் கல்லூரிகளில் அமைந்துள்ளவாறு, இந்தியக் கல்லூரிகளிலும் அமையவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதை யொட்டி, சென்னை விலங்கு மருத்துவக் கல்லூரியின் தரத்தை உயர்த்தவும் மத்திய அரசாங்கம் முன் வந்தது. அதனால் எம். வி. எஸ். சி. மேல் பட்டப்படிப்பு அமைக்கப் பட்டது. 1959-ம் ஆண்டிலிருந்து நமது மாநிலத்தைச் சேர்ந்த 9 மாணவர்களும், மற்ற மாநிலங்களைச் சேர்ந்த 9 மாணவர்களும் இந்தப் பட்டப்படிப்புப் படித்துவருகின் றனர்.

விலங்கு மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த 250 மாணவர்களுக்கு வசதியாக ஓர் உணவு விடுதி கட்டப்பட்டுள்ளது. நடைபாதைகள். சாக்கடைகள் முதலியனவும் 1959-ம் ஆண்டு முடிக்கப்பட்டன. அடுத்த ஆண்டில் விடுதிக்கான மேஜை, நாற்காலிகள் வாங்கப்பட்டன.

ஹொசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள விலங்குச் செல்வப் பண்ணைகளில் ஸ்டாக்மன்களுக்குரிய 11 மாதகாலப் பயிற்சியளிக்கபபடுகிறது. 200 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

இருபத்து மூன்று விலங்கு மருத்துவ நிலையங்களில் மின்சார வசதி செய்து தரப்பட்டுள்ளது.

1957-58-ம் ஆண்டில் 34 அணுப்பெருக்காடிகள் வாங்கப்பட்டன.

**பால்பண்ணையும் பால் வழங்கலும்.**—பால் வியாபாரம், உழவர்களின் முக்கியத் துணைத் தொழிலாக விளங்குகிறது. இதனால் அவர்களுக்கு வருவாயும் கிடைக்கிறது. நம் நாட்டில் மாடுகள் ஏராளமாக இருந்த போதிலும், அவை தரமான உடல் வன்மை பெற்றவையாக இல்லை. இதனால், நம் மாநிலத்தில் பால் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இரண்டாவது திட்டக்கால ஆரம்பத்தில், அன்றாடச் சராசரி பால் கறவை 39,000 பட்டணம் படியாக இருந்தது. அதை 60,000 படியாக உயர்த்த வேண்டும் என்பதே லட்சியம். அதன் பொருட்டுத் திட்டக் காலத்தில் 237 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு யூனியனும் அமைக்கப்பட்டன. சங்க உறுப்பினர்கள் கறவைப் பசுக்கள் வாங்குவதற்காக ரூ. 49 லட்சம் வரை அரசியலார் கடனுக அளித்தார்கள். சென்ற ஆண்டில் சராசரி பால் கறவை 58,841 பட்டணம் படி எனலாம். அனுகூலங்களை முன்னிட்டு ஒரு லாம்ரெட்டாவும், ஒரு தொலை நோக்கிக் கருவியும் சென்னை மத்தியப் பால் பரிசோதனை ஆய்வுக்கூடத்திற்காக வாங்கப்பட்டன. இந்த ஆய்வுக் கூடத்திற்குக் குளிர் செய்யும் கருவி ஒன்றும், குளிர்ப் பதப் பெட்டி ஒன்றும், எஃகு அலமாரிகளும் வழங்கப்பட்டன.

நமது மாநிலத்தில் பாஸ்டியூர் முறைச் சாதனங்களை அமைக்க மூன்று பால் வழங்கு யூனியன்கள் அனுமதிக்கப்பட்டன.

அவற்றுள் கோடைக்கானல் பால் வழங்கு யூனியன், திட்டக்கால முதல் ஆண்டிலேயே இவ் இயந்திரங்களை வாங்கி அமைத்துக் கொண்டது. கோயம்புத்தூர் பால் வழங்கு யூனியன், இயந் திரங்களை வைப்பதற்காகப் பால்பண்ணைக் கட்டிடங்களைக் கட்டி முடித்துள்ளது. இங்கு 1960 டிசம்பரில் பாஸ்டியூர் முறைச் சாதனங்கள் பொருத்தப்பட்டன.

இதுவரை, சென்னைப் பால் வழங்கு யூனியனுக்குப் பால் டப்பிகளைக் கழுவும் இயந்திரம், மின்சார டிரான்ஸ்பார்மர், இரண்டு மோட்டார் வண்டிகள், 100 பெரிய அலுமினிய டப்பிகள் ஆகியவை வழங்கப்பட்டன. பாலைக் குளிர வைக்கும் சாதனம், 12 லாம்ரெட்டாக்கள், குப்பிகளைக் கழுவிப் பால் நிரப்பும் இயந்திரம், குளிர்ப் பதன இயந்திரங்கள் 10 ஆகியவையும் பின்னர் அளிக்கப்பட்டன. இம் மாதிரியே நாஞ்சில் நாட்டு யூனியனுக்கும் பால் பண்ணைச் சாதனங்களும், ஒரு மோட்டார் வண்டியும் வழங்கப்பட்டன.

சென்னைக்கு அண்மையிலுள்ள மாதவரத்தில் 4,000 கறவை மாடுகளைக் குடியேற்றி, நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பால்

மாதவரம் பால் பண்ணை.



பண்ணையை நிறுவத் தீர்மானிக்கப்பட்டது. இதனால் நாள் ஒன்றுக்கு 1 முதல் 2 லட்சம் பவுண்டு வரை பால் உற்பத்தி ஏற்படும்.

இக் காலனிக்குரிய கட்டிடங்கள், 4,000 மாடுகளும் அவற்றின சொந்தக்காரர்களும் தங்கியிருக்கும் வகையில் நடுவில் பூங்காவுடன் அமைக்கப்படுகின்றன. கட்டிடங்கள் இரண்டு வரிசைகளில் கட்டப்படும். ஒவ்வொரு வரிசையிலும் நான்கு பகுதிகள் உண்டு. ஒவ்வொரு பகுதியிலும் 500 மாடுகள் கட்டலாம். 500 மாடுகளுக்கான ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டு, மாடுகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அடுத்து மற்ற மூன்று பகுதிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவை மாடுகள் தங்குவதற்குத் தயாராய் உள்ளன.

பால் மரத்துப்போன மாடுகளை மீட்டுக் காப்பாற்றும் பொருட்டுத் திட்டக் காலத்தில் 4 மீட்புப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. தூவக்குடி, வீரபாண்டி, அபிஷேகப்பட்டி, விருதுநகர் ஆகிய இடங்களில் இப்பொழுது மீட்புப் பண்ணைகள் இயங்குகின்றன.

விலங்குச் செல்வங்களின் தரத்தை உயர்த்தி, உயர்ந்த ரகங்களை வளர்ப்பதை ஊக்குவிக்கத் திட்டக் காலத்தில் 12 விலங்குச் செல்வ வளர்ப்புச் சங்கங்களை நிறுவத தீர்மானிக்கப்பட்ட திட்டமுடிவில் இந்த லட்சியம் நிறைவேற்றப்பட்டது.

# 4. வன வளம்

நாட்டின் தொழில் வளஞ் சிறக்கக் காடுகள் இன்றியமையாதன. வேளாண்மை வளர்ச்சிக்கும் அவை அனுகூலமாய் இருக்கின்றன. இதனால்தான், ஒரு நாட்டின் மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பாகம் காட்டு நிலமாய் இருக்கவேண்டும் என்று நிபுணர்கள் கூறியுள்ளார்கள். நமது மாநிலத்தின் மொத்தப் பரப்பளவில் 17 சதவீதப் பகுதியே காடாக இருக்கின்றது. எனவே, வனவளத்தைப் பெருக்க இரண்டாவது திட்டத்தில் முன்னேற்ற நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப் பட்டன. அவற்றின் மொத்தச் செலவு சுமார் ரூ. 71 லட்சமாகும்.

பசுமையான காடுகள் குறைந்து போனால் மழையளவும் குறைந்துபோகும் என்ற உண்மை நாம் அனைவரும் அறிந்ததே. மேலும், மர வேர்கள் வெகு ஆழம்வரை சென்று மண் வளத்தையும் பாதுகாத்து வைக்கின்றன. இருளடர்ந்த காடுகளில் எத்தனையோ வகை விலங்குகள் வாழ்கின்றன. இவை அழிந்து போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குக் காடுகளை வளர்ப்பதில் முனைப்பாக ஈடுபட வேண்டியுள்ளது. நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த முதுமலையில் வனவிலங்குப் புகலிடம் ஒன்று வளர்க்கப்பட்டு வருகின்றது. இங்கு நேர்த்தியான இயற்கைச் சூழலில் பலவித விலங்குகளும் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றுக்கு நீர்த் தொட்டிகள், 30 உப்புத் துண்டு நக்குமிடங்கள் முதலியன அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறே, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கல் பறவை சரணாலயமும் மேலும் வளர்ச்சியுறும்.

நம் நாட்டில் விலங்குச் செல்வங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றின் தீனிக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டியது முக்கியம். இதன் பொருட்டு ஒதுக்கக் காடுகளில் நீர்நிலைகளைப் பெருக்கவும் 12,500 ஏகரா நிலத்தில் புல் வளர்க்கவும் திட்டமிடப்பட்டது. இது வரை 11,000 ஏகரா நிலம் வளப்படுத்தப்பட்டுள்ளது. ஆறு, கால்வாய், ஏரிக்கரைப் பகுதிகளில் அடர்ந்த காடுகள் இருக்கவேண்டியது அவசியம். கரையோர மரங்கள் இல்லாவிடின் மண் அரிப்பு ஏற்பட்டு ஆறு, கால்வாய், ஏரி முதலியவை மண்மேடிட்டுப் போகின்றன. ஆகவே, இரண்டாவது திட்டக் காலத்தில் காவிரிக் கரையிலும், தாம்பரபரணிக் கரையிலும் மொத்தம் 3,896 ஏகரா பரப்பில் தேக்கு நடப்பட்டது.

பலவகைக் கட்டிடங்கள் இன்று பெருகி வருகின்றன. அவற்றைச் செம்மையான முறையில் அமைப்பதற்குச் சிறந்த மரவகைகள் வேண்டியிருக்கின்றன. தேக்கு, நூக்க மரம் முதலானவை வாணிப முக்கியத்துவம் வாய்ந்த மரங்களாகும். ஆகவே திட்டக் காலத்தில் 4,170 ஏகரா பரப்பில் தேக்கும், 600 ஏகரா பரப்பில் மூங்கிலும் விளைவிக்கத் திட்டமிடப்பட்டது. இதுவரை 5,163 ஏகரா பரப்பில் தேக்கும், 464 ஏகரா பரப்பில் மூங்கிலும், 230 ஏகரா பரப்பில் மற்ற மரங்களும் நடப்பட்டுள்ளன.

தீக்குச்சித் தயாரிப்புக்கு மென்மையான மரவகை வேண்டும். இது இன்றுள்ள நிலையில் வளர்ந்துவரும் தீக்குச்சித் தொழிலுக்குத் தேவையான அளவில் இல்லை. ஆகவே, 8,300 ஏகரா பரப்பில் மென்வகை மரங்கள் பயிராக்க முடிவு செய்யப்பட்டது. இதுவரை 8,075 ஏகரா பரப்பில் மரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வாட்டிலும் கற்பூரமும் பலவகைப் பயன்களைக் கொடுக்கும் மரங்களாகும். நன்கு முதிர்ந்த வாட்டில் மரப் பட்டைகளிலிருந்து "டானின்" என்ற நிறமற்ற பொருள் தயாரிக்கப்படுகின்றது. இது தோல் பதனிடு தொழிலுக்கு மிகவும் தேவையாக இருக்கின்றது. நம் மாநிலத்தில் தேவையான அளவு இது கிடைப்பதில்லை. ஆகவே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. மேலும், வாட்டில் மரக் கூழானது காகிதம், ரயான் ஆகியவை தயாரிக்கப் பயன்படுகிறது. இவை மட்டுமல்லாமல், இம்மரத்தின் கட்டை சிறந்த எரி பொருளாகவும் விளங்குகிறது. கற்பூர மரத்தின் கூழும் காகிதம், ரயான் இவை தயாரிக்க உதவுகின்றது. அதன் இலைகளிலிருந்து கற்பூரத் தைலம் உற்பத்தி செய்யப்படுகிறது. தவிரக், கற்பூர மரக்கட்டைகள் எரிக்கவும் பயன்படுகின்றன. ஆகையினால் 19,000 ஏகரா பரப்பில் வாட்டிலும், 1,900 ஏகரா பரப்பில் கற்பூரமும் வளர்க்க லட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை 20,344 ஏகரா பரப்பில் வாட்டில் மரமும், 3,026 ஏகரா பரப்பில் கற்பூர மரமும் வளர்க்கப்பட்டுள்ளன.

கவனிப்புக் குறைவினால் நம் மாநிலத்தில் பல காடுகள் அழிந்து போயின. இந்த இழப்பு நமது பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. மண் அரிப்பைத் தடுப்பதற்கும் எரி பொருள் தேவைகளுக்காகவும் விறகு மரங்கள் வளர்க்கப் படவேண்டும். இதுவரை குன்றுப் பகுதிகளில் 16,334 ஏகரா பரப்பில் விறகு மரங்கள் நடப்பட்டுள்ளன. இது தவிர,

செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் 73,456 ஏகரா பரப்பில் விறகு மரங்களும், புல்வெளியும் வளர்க்கப்பட்டன. இத் திட்டத்தின் செலவு மதிப்பீடு ரூ. 30 லட்சம் ஆகும். இம் மரங்கள் வளர்ந்து முதிர்ந்ததும் ஆந்திர மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் விறகின் அளவு மிகக் குறையும்.

ஆற்றங்கரையோர வயல்களில் அடிக்கடி மண் அடித்து வரப்படுவதால், வேளாண்மைக்கு இடையூறு ஏற்படுகிறது. இதைத் தடுக்க ஆற்றங்கரையோரப் பகுதிகளில் மரங்கள் நிறைந்திருக்க வேண்டும். அந்த இடங்களில் சவுக்குப் பயிராக்கத் திட்டமிடப்பட்டது. இதுவரை 3,273 ஏகரா பரப்பில் சவுக்கு மரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

காடுகளைக் கவனித்துக் கொள்ளும் காவலர்களும், கண்காணிப்பாளர்களும் வெகு தொலைவில் தங்கள் கடமையினை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அவர்கள் சிறந்த முறையில் காரியமாற்றக் காட்டுப் பகுதிகளில் அவர்களுக்கு இல்லங்கள் அமைத்துக்கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வகை இல்லங்கள் 71 அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

காட்டுப் பகுதிகளுக்குச் செல்ல நல்ல பாதைகளும் அவசியம். புதுப் பாதைகள் அமைப்பதோடு பழுதடைந்த பழையனவற்றையும் திருத்தி அமைக்கவேண்டும். சுமார் 27 மைல் நீளப் புதுப்பாதைகள் மூன்று அமைக்கப்பட்டன. பழைய பாதைகள் 32 மைல் நீளத்திற்குச் செப்பனிடப்பட்டன. மரம் வெட்டக் கருவிகளைக் கையாள்வதிலும் நவீன முற்போக்கு முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மண் அரிப்பு ஏற்படுவதைக் குறித்து ஆராய ராமேஸ்வரத்தில் ஓர் ஆராய்ச்சி நிலையமும் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

இவ்வகை வளர்ச்சித் திட்டங்களே அல்லாமல், தரிசு நிலங்களிலும் வயலோரங்களிலும் மரங்களை வளர்க்கும் 'பண்ணைக் காடு வளர்ச்சித் திட்டம்' என்றதொரு புதிய திட்டமும் புகுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 2,340 ஏகரா பரப்பில் மரங்கள் வைக்கப்பட்டன.

தற்போது தமிழ்நாட்டில், 6,718 சதுர மைல்களில் ஒதுக்கப்பட்ட காடுகளும், 1,550 சதுர மைல்களில் முன்னாள் ஜமீனைச் சேர்ந்த காடுகளும் அமைந்திருக்கின்றன.

## 5. மீன் வளம்

நமது மாநிலத்தில் 620 மைல் நீளக் கடல் இருக்கின்றது. உள் நாட்டு நீர் நிலைகளின் மொத்தப் பரப்பளவு 4 லட்சம் ஏக்கர். ஆகவே, மீன்பிடி தொழிலை மிக நன்றாக வளர்ச்சி யுறச் செய்யக்கூடிய சாதக சூழ்நிலை அமைந்துள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மீன் அளத்துறையின் வளர்ச்சிக்கு ரூ. 79·35 லட்சம் செலவிடப்பட்டது.

திட்டக்கால முதல் மூன்றாண்டுகளில் 140 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாகவும், மானியமாகவும் ரூ. 13 லட்சம் வழங்கப்பட்டது. அடுத்த இரண்டாண்டுகளில் ரூ. 8 லட்சம் 70 சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

முன்னேற்ற நாடுகள் பலவும் இன்று நைலான் வலைகளைப் பயன்படுத்துகின்றன. இவை உறுதியுடன் நீண்ட நாட்கள் உழைக்கின்றன. மீன்களும் அதிக அளவில் பிடிபடுகின்றன. ஆகையினால் இவற்றை இறக்குமதி செய்து, குறைந்த விலையில் மீனவர்களுக்கு அரசாங்கம் விற்று வருகின்றது. திட்டக் கால முதல் ஆண்டில் 300 நைலான் வலைகளும், 4,200 ராத்தல் டெரிலின் கெட்டி நூலும் இறக்குமதி செய்யப்பட்டு வழங்கப்பட்டன. திட்டக் காலத்தில் 30,000 ராத்தல் நைலான் நூல் இறக்குமதி செய்யப்பட்டது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 7·20 லட்சம்.

துறைமுக நிபுணர்களின் சிபாரிசின்படி, சென்னை, லீபுரம், நாகப்பட்டினம், கடலூர் ஆகிய துறைமுகங்களில் ஏற்ற இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்ச்சியுற்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கொளச்சலில் படகுகளை நிறுத்திவைக்க வசதியாக இருக்கும் பொருட்டு, நங்கூரமிடும் மிதவைகள் வழங்கப்பட்டன.

அடையாறு கடற் கழியை உபயோகப்படுத்தி மாதிரி ஆற்று முகத்துவார மீன் பண்ணை அமைக்கப்பட்டது. அலுவலகம், ஆய்வுக் கூடம் ஆகியவற்றின் கட்டிடங்களும், கிடங்கு அறையும் அமைக்கப்பட்டன. இங்கு ஆராய்ச்சி வேலை நடை பெற்று வருகின்றது.

மீன் பிடித்துக்கொண்டுதிரும்பும் மீனவர்கள், கடற்பாறைகளைக் கண்டறிந்து பத்திரமாகத் திரும்பி வருவதற்காக,

கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபத்தின் உச்சியில் வழி காட்டி விளக்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எநயம், புதன்துறை ஆகிய இடங்களில் இரு விளக்குகள் அமைக்க வும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீனைக் கரை சேர்க்கும் இடங்களிலிருந்து அது உட்கொள்ளப் படும் இடங்களுக்குக் கொண்டு செல்ல விரைவு வாகன வசதி கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை பல்வேறு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சுமார் 12 மோட்டார் வண்டிகளும், 9 லாம்ரெட்டாக்களும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

நமது மாநிலத்திலுள்ள மீனளத் துறையினரின் நீர் நிலை களிலும், தனிப்பட்டோர் நீர் நிலைகளிலும் திட்டக்கால முதல் மூன்றுண்டுகளில் சுமார் 10 கோடி மீன் குஞ்சுகள் வளர்க்கப் பட்டன. அடுத்த இரண்டாண்டுகளில் 6 கோடி குஞ்சுகள் வளர்க்கப்பட்டன.

பவானிசாகர், அமராவதி, மணிமுத்தாறு, சாத்தனூர் ஆகிய நீர்த் தேக்கங்களில் திட்டக்கால முதல் மூன்றுண்டுகளில் 26 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டன. அடுத்த இரண்டு

மேட்டூரிலுள்ள "உறைநிலையம்".



ஆண்டுகளில் இந்த நீர்த் தேக்கங்களிலும், கிருஷ்ணகிரி, வைகை ஆகிய நீர்த் தேக்கங்களிலும் 48 லட்சம் மீன் குஞ்சுகள் விட்டு வளர்க்கப்பட்டன.

மீனைப் பதப்படுத்தும் எளிய முறை, உப்பிட்டுப் பதப்படுத்துவது ஆகும். கடையில் மலிவாக விற்கும் உப்பை மீனவர்கள் பயன்படுத்துவதால், சுகாதாரக்கேடு உண்டாகிறது. அதனால் மீனைப் பதப்படுத்த அரசியலார் 21 உப்புக்கூடங்களை அமைத்து உள்ளனர். நல்ல வகை உப்பு மணங்கு ஒன்றுக்கு 45 காசுகள் என்ற விலைப்படி மீனவர்களுக்குத் தரப்படுகின்றது.

மீன்களைக் கெட்டுப்போகவிடாமல் சேமித்து வைக்கும் பொருட்டு இரண்டு 'உறை நிலையங்கள்' மேட்டூரிலும் தூத்துக்குடியிலும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. கடலூரில் ஒரு பனியறைச் சாதனம் அமைக்கப்படுகின்றது. மேலும் மூன்று சாதனங்கள் வெவ்வேறு இடங்களில் அமைக்கப்படும்.

தூத்துக்குடி, கன்னியாகுமரி, நாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களிலும் மீன் மாவு, மீன் எண்ணெய், மீன் உரம் முதலியன தயாரிக்க இயந்திரங்கள் அமைக்கப்படும். அந்நியச் செலவாணி முட்டுப் பாட்டில் இந்த இயந்திரங்கள் வாங்குவது தடைப்பட்டு நிற்கிறது.

மீன்கள் பெருகப் பெருக, அவற்றை விற்பனை செய்யத் தூய்மையான மார்க்கெட்டுகளும் விருத்தியாகவேண்டும். சுமார் 20 நகராட்சி மன்றங்களுக்கு ரூ. 1·24 லட்சம் வரை மீன் மார்க்கெட் வளர்ச்சியை உத்தேசித்து உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மொத்தம் 35 நகராட்சிகளும், பஞ்சாயத்துகளும் இந்த நன்மையைப் பெற்றன.

இவை தவிர, 'பாப்லோ' முறை இயந்திரப் படகுகளும் குறைந்த விலையில் கொடுக்கப்படுகின்றன. இவை மீனவர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. திட்டக் காலத்தின் முதல் மூன்றாண்டுகளில் 65 படகுகள் கட்டப்பட்டன. அடுத்த இரண்டாண்டுகளில் 67 படகுகள் அமைத்துக்கொடுக்கப்படும்.

இம் மாதிரி புதுவகை இயந்திரப் படகுகளைச் செலுத்துவதிலும் தூண்டில்களை உபயோகப்படுத்துவதிலும் மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க நாகப்பட்டினத்திலும் தூத்துக்குடியிலும் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இரண்டு நிலையங்களிலும் ஆண்டுக்கு 80 பேர் பயிற்சி பெறுகின்றனர்.

# 6. சமுதாய நல வளர்ச்சி

கிராமங்களின் சமுதாய அமைப்பிலும், பொருளாதார அமைப்பிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அவற்றையொட்டித் தமிழ் நாடானது மொத்தம் 374 வளர்ச்சி வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு வட்டாரத்திலும் 100 கிராமங்கள் அடங்கும். அவற்றின் மக்கள்தொகை 66,000 ஆக இருக்கும். திட்டக் காலத்தில் 254 வட்டாரங்களில் சமுதாய நலத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எஞ்சியிருக்கும் 120 வட்டாரங்களிலும் 1963 அக்டோபர் 2-க்குள் இத் திட்டம் அமுலாக்கப்படும். இத் துறையில் முதல் திட்டக் காலத்தில் 75 லட்ச ரூபாயும், இரண்டாவது திட்டக் காலத்தில் 13·78 கோடி ரூபாயும் செலவிடப்பட்டது. மூன்றுவது திட்டத்தில் 20-36 கோடி ரூபாய் செலவழிக்கப்படும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் முதல் நான்கு ஆண்டுகளில், சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

### வேளாண்மை

| | இனம். | யூனிட். | எய்திய இலக்கு, |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | வழங்கிய உயர் ரக விதைகள் | மணங்கு | 1,375,927 |
| 2 | வழங்கிய உரப்பொடிகள் | ஷை | 10,742,938 |
| 3 | வழங்கிய உயர்வகைக் கருவிகள் | எண்ணிக்கை | 98,421 |
| 4 | வெட்டிய கலவை எருக் குழிகள் | ஷை | 344,581 |
| 5 | நடத்திய வேளாண்மைச் செயல் முறைக் காட்சிகள். | ஷை | 436,598 |

## விலங்குச் செல்வப் பாதுகாப்பு

| | இனம். | யூனிட். | எய்திய இலக்கு. |
|---|---|---|---|
| | (1) | (3) | (3) |
| 6 | வழங்கிய உயர்வகைப் பிராணிகள் | எண்ணிக்கை | 8,827 |
| 7 | வழங்கிய உயர்வகைப் பறவைகள் | ஷை | 82,971 |
| 8 | காயடித்த பிராணிகள் | ஷை | 432,393 |

## சுகாதாரமும் கிராமத் துப்புரவும்

| | | | |
|---|---|---|---|
| 9 | கட்டிய கிராமக் கக்கூசுகள் | எண்ணிக்கை | 27,951 |
| 10 | வெட்டிய மலக் குழிகள் | ஷை | 71,692 |
| 11 | போட்ட கிராமப் பாதைகள் | சதுர கஜம் | 453,743 |
| 12 | கட்டிய கிணறுகள் | எண்ணிக்கை | 7,152 |
| 13 | செப்பனிட்ட கிணறுகள் | ஷை | 9,900 |

## சமூகக் கல்வி

| | | | |
|---|---|---|---|
| 14 | கல்வி கற்ற முதியோர் | எண்ணிக்கை | 181,215 |
| 15 | ஆரம்பித்த படிப்பகங்கள், நூல் நிலையங்கள். | ஷை | 1,805 |
| 16 | நிறுவிய இளைஞர் சங்கங்கள், குடியானவர் யூனியன்கள். | ஷை | 4,520 |
| 17 | ஆரம்பித்த மகளிர் சங்கங்கள் | ஷை | 1,275 |

## போக்குவரத்துப் பாதைகள்

| | | | |
|---|---|---|---|
| 18 | போடப்பட்ட புதிய பாதைகள் | பர்லாங்கு | 17,803 |
| 19 | சீர்திருத்தப்பட்ட பாதைகள் | ஷை | 16,779 |
| 20 | கட்டிய மதகுகள் | எண்ணிக்கை | 1,972 |

## மக்கள் பங்கு

(ரூபாய் லட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 21 | மொத்தப் பங்கு (உடலுழைப்பு ரொக்கம், மற்றவை). | 245·56 |

# 7. கூட்டுறவு

முதல் ஐந்தாண்டுத் திட்டக்கால முடிவில் 49 சதவீத கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அவை 21 சத வீத கிராம மக்களுக்கு உதவின. அவை ஆண்டுக்கு 6 கோடி ரூபாய் கடன் கொடுத்தன. இரண்டாவது திட்டக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் சிறப்படையலாயின. அவை 85 சத வீத கிராமங்களில், 45 சதவீத மக்களுக்குக் கடன் வசதி செய்து தரவேண்டும் என்பது இலக்காகக் கொள்ளப்பட்டது. ஆயினும், இரண்டாவது திட்ட முடிவிற்குள்ளாக எல்லாக் கிராமங்களிலுமே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1959-ம் ஆண்டில் 19 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1960–61-ல் 55 சதவீத மக்கள் கூட்டுறவு இயக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டு, 25 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டார்கள்.

கடன் கொடுப்பதுடன், பொருள்களைச் சேகரித்து வைக்கக் கிடங்குகள் கட்டியும் அரசாங்கம் உதவுகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25 பிரதம கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை நிறுவ வேண்டும் என்றும், 245 கிடங்குகளைக் கட்ட வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டது. முதல் மூன்று ஆண்டு களில் 14 விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இரண்டா வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒரு மாநிலக் கூட்டுறவு விற்பனைச் சங்கமும், 30 பிரதம கூட்டுறவு விற்பனைச் சங்கங்க ளும், 293 கிடங்குகளும் அமைக்கப்பட்டன.

நிலச் சீர்திருத்தம், அதிக உற்பத்தி—இவற்றை முன்னிட்டுக் கூட்டுறவுப் பண்ணை மிகவும் முக்கியமடைந்துள்ளது எனலாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 30 கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. திட்ட முடிவில், கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் 17-ம், கோயில் குத்தகை நிலங்களில் 74 ம் மற்ற வகையில் 36-ம் ஏற்படுத்தப் பட்டன.

கூட்டுறவுப் பயிற்சி யளிப்பதிலும் தனிக் கவனம் செலுத்தப் பட்டு வருகின்றது. ஐந்து கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களும் கடந்த திட்டக் காலத்தில் 4,318 பேர்களுக்கும், 35,851 பஞ்சாயத்து உறுப்பினர் முதலியோருக்கும் பயிற்சியளித்தன. சேலத்திலும், காஞ்சீபுரத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையங்களில் 360 பேர்கள் பயிற்சி பெறுகின்றனர். கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களின் கட்டிட அமைப்புக்கு ரூ. 2 லட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது.

## 8. தொழில்கள்.

**பெருந் தொழில்கள்.**—நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 86 கோடியாக இருக்கும். 1959-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிய ரூ. 11 கோடி செலவாயிற்று. அடுத்த ஆண்டில் ரூ. 15·47 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 49 கோடி செலவழிக்கப்படும். இத் திட்டத்தின் முக்கியப் பகுதி நிலக்கரியை வெட்டி எடுத்தலாகும். ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும். இதற்கான இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி கீழ்க்கண்டவாறு உபயோகப்படுத்தப்படும். 15 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை உபயோகித்து 2·5 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். 5 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை உபயோகித்துச் செயற்கை உரமாகிய ஊரியா 1·5 லட்சம் டன் தயார் செய்யப்படும். பாக்கியுள்ள 15 லட்சம் டன் நிலக்கரி, சுட்ட நிலக்கரி

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரி



அச்சுக்கள் தயாரிக்க உபயோகப்படுத்தப்படும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 60 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்ட மிட்டவாறு மின்சக்தி, 'யூரியா' உரம், சுட்ட நிலக்கரி, அச்சுக் கள் ஆகியவற்றைத் தயாரிக்கத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன.

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரியை உபயோகித்துச் சேலம் இரும்புக் கனிகளைக் கொண்டு இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்காகப் பூர்வாங்க ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. இதற்காக மத்திய அரசாங்கம் ஒரு தொழில் நுட்பக் குழுவை அமைத்துள்ளது.

இம் மாநிலத்தில் காவிரிப் பகுதியில் பூமிக்கடியில் எண்ணெய் இருக்கிறதா என ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசியலாரின் வேண்டுகோளின் பேரில், இந்திய அரசினர் இம் முயற்சியைத் தீவிரப்படுத்த ஒப்புக் கொண்டுள்ளனர்.

நீலகிரியில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்காக ஒரு பிரஞ்சுக் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டிற்குள்ளாக அங்குக் கச்சா பிலிம் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல் கட்டத்தில் இதற்கு 5 கோடி ரூபாய் செலவாகும். இத் தொழிலின் மூலம் 1,300 பேர் வேலை பெறுவார்கள்.

தேசீயத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பொரேஷன் மூலமாகக் கிண்டியில் ரண சிகிச்சைக் கருவிகளை உற்பத்தி செய்ய மத்திய அரசினர் முடிவு செய்திருக்கின்றனர். ஆண்டு ஒன்றுக்குப் பல விதமான 20 லட்சம் கருவிகள் இங்குத் தயாரிக்கப்படும். ரஷ்ய உதவியும் கிட்டியுள்ளது. இங்கு 2,000 பேர்கள் வேலை பெறுவார்கள்.

கூட்டுறவு முறையில் எடுத்துக்கொள்ளப்பட்ட மூன்று சர்க் கரைஆலைகளும் திட்டத்தின் தொடக்க ஆண்டிலேயே அமைக்கப் பட்டன. இந்த மூன்று ஆலைகளும் முறையே மதுராந்தகம், உடுமலைப் பேட்டை, ஆம்பூர் ஆகிய மூன்று இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆம்பூர், உடுமலைப் பேட்டை இரண்டிடங்களிலும் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 1960-ல் உற்பத்தி தொடங்கின.

தனியார் துறையிலும் பலர் புதிய பெருந் தொழில்களை ஆரம்பிக்க முன்வந்துள்ளார்கள். திருநெல்வேலி சோடா உப்புத் தொழிற்சாலை நல்ல முறையில் இயங்கி வருகின்றது. கோவை மாவட்டத்தில் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதற்கான இயந்திரங் களை வரவழைக்க ஏற்பாடாகிவிட்டது. இத்தொழிலுக்கு வேண்டிய மூலதனம் ரூ. 3·5 கோடி. தமிழ்நாடு அரசியலார் 10 லட்ச ரூபாய் அளவிற்கு இதில் பங்கு எடுத்துக்கொண் டுள்ளனர். இதில் 1,500 பேர் வேலை பெறுவார்கள்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்டிருக்கும் சிமெண்ட் தொழிற்சாலையில் 1960-ம் ஆண்டு மத்தியில் சிமெண்ட் உற்பத்தி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கலாம். இந்தத் தொழிற்சாலை யின் மொத்த மூலதனம் ஒரு கோடி ரூபாய். முதற்படியாக, இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 66,000 டன்கள் சிமெண்ட் உற்பத்தியாகும். இறுதியாக, ஆண்டொன்றுக்கு 132,000 டன்கள் சிமெண்ட் உற்பத்தியாகும். 700 பேர் களுக்கு வேலை கிடைக்கும்.

சேலத்தில் கிடைக்கும் மாக்னசைட்டைக் கொண்டு உயர்தர அடுப்புக் கற்கள் செய்வதற்காக பர்ன் அண்டு கம்பெனியினர் எடுத்துக்கொண்ட திட்டம் முடியுந் தறுவாயில் உள்ளது. 1961-ல் முழு அளவில் இங்கு உற்பத்தி ஏற்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இங்கு மாதம் ஒன்றுக்கு 1,000 டன் மாக்னசைட் செங்கற்கள் உற்பத்தியாகும்.

மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஓர் இத்தாலியக் கம்பெனியாரின் உதவியுடன் ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

சிமெண்ட் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், சர்க்கரை உற் பத்தி செய்யும் இயந்திரங்கள் இவைகள் போன்ற பல்வேறு இயந்திரங்கள் உற்பத்தி செய்யக்கூடியதும், திருவொற்றியூரில் அமைந்துள்ளதுமான தொழிற்சாலையை விரிவாக்க ராமகிருஷ்ண அண்டு சன்ஸ் கம்பெனியார் முன்வந்து, அதற்கான அனுமதி யும் பெற்றுள்ளார்கள். இது, பிரஞ்சுத் தொழில் நிறுவனம் ஒன்றின் உதவி பெற்று அமைக்கப்பெறும். இப்பொழுதே சில இயந்திரங்கள் இத்தொழிற்சாலையில் செய்யப்பட்டு வருகின்றன. இதை விரிவாக்குவதற்கான முயற்சிகள் துரித மாக நடைபெற்று வருகின்றன.

ரயில்வே வாகன்கள் கட்டுவதற்கான தொழிற்சாலையொன்று ஆவடியை அடுத்துள்ள பட்டாபிராமில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு ஆண்டொன்றுக்கு 1,000 வாகன்கள் கட்டப்படும். இதன் மூலதனம் ஒரு கோடி ரூபாய். தமிழ்நாடு அரசின ரூ. 2 லட்சம் பங்குத் தொகையாக வழங்கியுள்ளனர்.

நாள் ஒன்றுக்கு 50 முதல் 60 டன் வரை காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை மேட்டூரில் சேஷசாயி நிறுவனத்தார் கட்டி வருகிறார்கள். இதற்கு வேண்டிய மூலதனம் நான்கு கோடி ரூபாய். ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் பங்கெடுத்துக்கொள்ள ஒப்புக்கொண்டிருக்கிறது. அதற்கான இயந்திரங்கள் அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்படும்.

ஒரு கோடி ரூபாய் முதலுடன் மாதம் ஒன்றுக்கு 15,000 மோட்டார் சக்கரங்களும், ரிம்களும் தயார் செய்வதற்காக மதுரை டி. வி. எஸ். கம்பெனியார் பெரிய தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன்வந்துள்ளனர்.

ரசாயன உரங்கள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் இரண்டை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளும் சீக்கிரம் முடிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு பல தொழிற்சாலைகள் ஏற்பட இருந்தும், நம் மாநிலத்தில் இவை போதிய அளவில் இல்லை என்பதை அரசியலார் நன்கு உணர்ந்துள்ளனர். ஆகவே, தொடர்ந்து இன்னும் பல கனரகத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும். தேசீயப் பொருளாதார ஆராய்ச்சிக் குழுவினரின் சிபாரிசுகளின் அடிப்படையில், மூன்றாவது திட்டக் காலத்தில் தொழில் வளர்ச்சி அமையும் என எதிர் பார்க்கலாம்.

**சிறுரகத் தொழில்கள்.**—பொருளாதாரச் சீரமைப்புக்குக் கனரகத் தொழில்கள் மட்டும் வளர்ச்சியுற்றால் போதாது. கூடவே சிறு தொழில்களும் பெருகிப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நல் வாழ்வளிக்க வேண்டும்.

நமது மாநிலத்தில் சுமார் 20 லட்சம் மக்கள் கைத்தறித் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். இவர்களில் 1·14 லட்சம் தறிக்காரர்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூட்டுறவுச்

சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இரண்டாவது திட்டக் காலத்தில் மேற் கொண்டு 91,718 தறிக்காரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். சாயமிடும் நிலையங்கள், அவற்றுக்கு வேண்டிய உபகரணங்கள் ஆகிய வசதிகளையும் அரசியலார் செய்துதந்துள்ளனர். உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் தேங்கிப்போய்த் தொழிலைப் பாதித்து விடாமல் இருக்க ரூபாய்க்கு 5 காசுகள் வீதம் அரசியலார் கழிவுத் தொகை அளித்து வருகின்றனர். நெசவாளர்களுக்குக் குடியிருப்புக் காலனிகள் கட்டுவதிலும் அரசியலார் கவனம் செலுத்தி வருகின்றனர். இரண்டாவது திட்டக் காலத்தில் 1,630 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. இதுவரை சுமார் 1,600 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தொழிலில் திறன்மிக்க நுண்பயிற்சியினைத் திட்டக் காலத்தில் 1,600 நெசவாளர்களுக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டது. 1960–61-ம் ஆண்டு முடிய 557 நெசவாளர்களுக்கு இத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டது. சாதாரண தறிகளை விசைத் தறிகளாக மாற்றும் ஒரு முன்னோடித் திட்டமும் சென்ற ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது. திருப்பூர், திருமழிசை, திருச்செங்கோடு ஆகிய மூன்று இடங்களிலும் 15 விசைத் தறிகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறு தொழில்களின் வளர்ச்சி பல விஷயங்களைப் பொருத்துள்ளது. வளர்ச்சி அடைந்துள்ள இயந்திரங்கள், தொழில் நுணுக்கப்பயிற்சி, மூலப் பொருள்கள், மின் விசை, கடன் வசதி, தொழிற்சாலை வசதி ஆகியவை நல்ல முறையில் அமைந்திருக்க வேண்டும். இதற்கான வகையில் அரசியலார் பல சட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளனர்.

கூட்டுறவுத்துறை, தனியார் துறை கைத்தொழில்களுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் தாராளமாகவும், விரைவாகவும் கடன் கிடைக்க வழி செய்வதற்காக, நமது ராஜ்யக் கைத் தொழில் உதவிச் சட்டமும் விதிகளும் திருத்தப்பட்டுள்ளன.

கிண்டியிலும், விருது நகரிலும் இரண்டு தொழிற் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஈரோடு, மார்த்தாண்டம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பேட்டை ஆகிய ஆறு இடங்களிலும் தொழில் காலனிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. இந்தத் தொழிற் பண்ணைகளிலும் காலனிகளிலும் கொடுக்கப்பட்டுள்ள 213 யூனிட்டுகளில் 206 வாடகைக்கு விடப்பட்டு அவைகளில் பல தொழில்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் பல யூனிட்டுகள் கட்டப்பட்டுவருகின்றன. கிண்டித் தொழிற் பண்ணை 1958-ம்



கிண்டியிலுள்ள தொழிற்பண்ணை

ஆண்டு ஜனவரியில் 52 யூனிட்டுகளுடன் ஆரம்பமாயிற்று. தற்போது 128 யூனிட்டுகள் அங்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. சேலம், காட்பாடி ஆகிய இடங்களில் இரண்டு தொழில் காலனிகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. காட்பாடி காலனிக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

சிறுரகத் தொழில்களுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 354 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதில் முதல் மூன்றாண்டுகளில் 195 லட்சம் ரூபாய் செலவாயிற்று. நான்காவது ஆண்டில் 100 லட்சம் ரூபாயும், இறுதி ஆண்டில் 114 லட்சம் ரூபாயும் செலவானது என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, ஐந்தாண்டுகளுக்கும் சேர்த்துச் செலவு ரூ. 409 லட்சம். தொழிற் பண்ணைகள், காலனிகளுக்காக ரூ. 95 லட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால், ஐந்தாண்டுகளில் ரூ. 154 லட்சம் செலவாகியுள்ளது.

சென்னையில் கிண்டித் தொழிற் பண்ணையிலுள்ள ரம்பச் சாலையுடன் கூடிய மரம் பக்குவப் படுத்தும் நிலையம் நன்கு செயலாற்றி வருகின்றது. பொள்ளாச்சியிலும் இது போன்ற நிலையம் பரீட்சார்த்த உற்பத்தியைத் தொடங்கியது. அது 24,000 கன அடி மரத்தைப் பக்குவப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தமானில் கிடைக்கும் வெட்டு மரத்தைப் பயன் படுத்தித் தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலை திருவொற்றியூரில் 1959-ல் ஆரம்பிக்கப்பட்டது. ரூ. 1·46 லட்சம் மதிப்புள்ள தீக்குச்சிகள் திட்டக் காலத்தில் தயாரிக்கப்பட்டன. காலணி தயாரிக்கும் நிலையம் ஒன்று திருவல்லிக்கேணியில் தொடங்கப் பட்டது. ஏற்கனவே பல்லாவரத்திலும், ஈரோட்டிலும் இரண்டு காலணி நிலையங்கள் இயங்கி வருகின்றன. கடலூரிலும், மன்னார்குடியிலும் மோட்டார் வேனுடன் கூடிய தச்சு, கொல்லுப் பட்டறைகள் நிறுவப்பட்டன. சென்ற ஆண்டில் இவை பயிற்சி யளித்ததுடன், ரூ. 5 லட்சம் மதிப்புள்ள பொருள்களையும் உற்பத்தி செய்தன. இறுதி ஆண்டில் 105 பேர் பயிற்சி பெற்றார்கள். கிண்டியில் ஸ்பானர்கள், திருப்புளிகள், சம்மட்டிகள் முதலியன தயாரிக்க 1957-ல் ஒரு யூனிட் அமைக்கப்பட்டது. திட்டக் காலத்தில் 7·34 லட்ச ரூபாய் மதிப்புள்ள கருவிகளைச் செப்பனிடும் வேலை நடைபெற்றது.

துணி ஆலைகளுக்கு வேண்டிய பாகங்களைத் தயாரிக்கும் பணி நிலையம் மதுரையில் ஏற்பட்டுள்ளது. பண்ணைக் கருவிகள் தயாரிப்பு நிலையம் ஒன்று திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. ஹரிக்கேன் விளக்கு, வார்ப்பட அச்சுகள் தயாரிக்கும் பணி நிலையம் பழனியிலும், பித்தளைப் பாத்திரம் தயாரிக்கும் தொழிற்சாலை கும்பகோணத்திலும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

பஞ்சு, இழைமல் இவை சுற்றப்பட்ட மின் கம்பிகள் முதலியவை தயாரிக்கவும், துலாக் கோல்கள், மற்றும் சோதனைச் சாலை நுண் கருவிகள் தயாரிக்கவும், கால் பந்து, கைப்பந்து, கூடைப் பந்து, ஹாக்கி மட்டைகள், பூப்பந்து மட்டைகள் முதலியவை தயாரிக்கவும், விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கவும் பயிற்சியளிக்கவுமான தனித் தனிப் பணி மனைகள் கிண்டியில் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வகைப் பொதுத் துறை அலுவல்களுடன் அரசாங்க உதவி நின்றுவிடவில்லை. தனியார் முயற்சிக்கும் ஊக்கமளித்துப் பொருள் வளஞ் சிறக்க அரசியலார் முயன்று வருகின்றனர். திட்டக் காலத்தில் சுமார் 109 லட்சம் ரூபாய் தனியார் துறைக்கு உதவியாகக் கொடுக்கப்பட்டது.

சங்கிலித் தொடரான ஸ்டோர்களுடன் மார்க்கெட்டிங் கார்ப்பொரேஷன் அமைக்கவும் அரசியலார் தீர்மானித்தனர். சென்னை, கரூர், தூத்துக்குடி, ஈரோடு, மதுரை, நாகர்கோவில்,

ராமேஸ்வரம், வேலூர் ஆகிய எட்டு இடங்களில் ஏற்கனவே விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

பச்சைத் தோல் வகைகளுக்குப் பேர் போன ஆம்பூரில் தோல் பதனிடும் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அழகிய மண் பாண்டங்கள், குறைந்த டென்ஷன் மின்காப்புகள், கழிவு நீர்க் குழாய்கள் முதலியன தயாரிக்கத் தென் ஆர்க்காடு மாவட்டத்தி லுள்ள விருத்தாசலத்தில் ஒரு நிலையம் நிறுவப்பட்டு உள்ளது. படிகக் கூழாங் கற்களை உடைத்துப் பொடியாக்கும் தொழிற்சாலை சேலத்திலும், குறைந்த குதிரைத் திறனுள்ள மோட்டார், ஸ்டார்ட்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலை கிண்டியி லும் தொடங்கப்பட்டுள்ளன. கிண்டியில் பெரிய இயந்திரங்கள் தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன.

மோட்டார் வண்டிகள், வீட்டு உபகரணங்கள், நிழற்பட விஞ்ஞானக் கருவிகள் பாகங்களைத் தயாரித்து நியாய விலையில் தனிப்பட்ட தொழில்களுக்கு வழங்கக் கிண்டியில் ஒரு யூனிட் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு உயர்ந்த ரக அழுத்த வார்ப் படம் தயாரிக்கப்படுகிறது. இத்துடன் மாதிரி வார்ப்படச் சாலை யொன்றும் நிறுவப்பட்டுள்ளது. ஈரோட்டிலும் இம்மாதிரி வார்ப் படச்சாலை இயங்கி வருகிறது. சிறு தொழில்களுக்கு வேண்டிய கருவிகளைத் தயாரித்து நியாயவிலையில் வழங்கப் பொதுக் கருவிகள் அறையும் ஈரோட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தாழ்ப்பாள், ஆணிகள், திருகுமரைகள் முதலியன தயாரிக்கும் யூனிட் ஒன்றும் இங்கே நிறுவப்பட்டுள்ளது.

சைக்கிள்களும், சைக்கிள் பாகங்களும் தயாரிக்கும் தொழிற் சாலைகள் வேலூரிலும், தஞ்சாவூரிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கட்டடங்கள் கட்டப்பட்டு, இயந்திரங்களும் இறக்குமதி செய்யப் பட்டன. சென்னை வால்டாக்ஸ் சாலையில் அழுத்த உலோகப் பொருள்கள் செய்யும் பணி நிலையமும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மெருகிட்ட குழாய்த் தயாரிப்புச் சாலையும் நிறுவப் பட்டு வருகின்றன. வேலூரிலுள்ள மகளிர் பின் பராமரிப்பு இல்லத்தில் ஹோல்டால், உடைகள் தயாரிப்பு வேலையிலும், சென்னையிலுள்ள ஆண்கள் பின் பராமரிப்பு இல்லத்தில் உலோகத் தகடு வேலை, பொருத்துவேலை முதலியவற்றிலும் பயிற்சி யளிக்கப்பட்டு வருகிறது. கைத்தறிப் பகுதிகளைத் தயாரிக்கச் சேலத்தில் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டு உள்ளது. மேட்டூரில் மின் முலாம் பூசும் சாலை இயங்கிவருகிறது.

சூடு தாங்கும் கற்கள் செய்யும் தொழிற்சாலை சிவகெங்கையில் நிறுவப்பட்டு வருகிறது.

**கைத்திற வேலைகள்.**—கை வேலைப்பாடு மிக்க பொருள்கள் நமது பண்பாட்டின் உயர்வைக் காட்டுவனவாகும். கலையும் அழகும் மிக்க அந்தப் பொருள்கள், இயந்திரப் போட்டிகளினால் மங்கிவரத் தொடங்கின. இவ்வாறு கை வேலைப்பாடு மிக்க பொருள்களின் விற்பனை குறைந்ததால், கிராம மக்களின் தன் நிறைவு குன்றியதுடன் நல்ல கலைஞர்களும் வறுமையில் வாட நேரிட்டது. இந்த நிலையை மாற்றி யமைத்து, கைத்திறப் பொருள்களின் வளர்ச்சிக்கு அரசியலார் சில திட்டங்களைத் தீட்டிச் செயல் படுத்தி வருகின்றனர். மக்களின் சக்திக்கேற்ற வாறு பொருள்களின் விலை அமையவும், அதே சமயத்தில் கலைஞர்களின் குடும்பம் நசித்துப்போகாமல் இருக்கவும் கவனம் செலுத்தப்படுகிறது.

அழிந்து வந்த புராதனக் கலைக் கைத் தொழில்களைக் காப் பாற்ற 60 திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. பயிற்சி நிலையங்கள், பணி நிலையங்கள், உற்பத்தி நிலையங்கள், ஆராய்ச்சி நிலையங்

கவின் பெற்ற கைத்திற வேலைப்பாடுகள்



கள், விற்பனை நிலையங்கள் ஆகியவை அமைக்கப்படுவதுடன், நியாய விலையில் கச்சாப் பொருள்கள் வழங்கப்பட்டும் வருகின்றன. நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலமான 1954-ல் கண்ணாடி வளையல்கள், மணிகள் செய்யும் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று மதுரையில் தொடங்கப்பட்டது. தடவைக்கு 15 பேர் வீதம் நான்கு தடவைகள் பயிற்சி அளிக்கப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. சிற்ப சாஸ்திரத்தில் சொல்லியுள்ள அளவுகளின்படி தெய்வ விக்ரகங்களைச் செய்வதில் பயிற்சியளிக்கும் நிலையம் ஒன்று சுவாமி மலையில் தொடங்கப்பட்டுள்ளது. மதுரையிலும் இம்மாதிரி நிலையம் நிறுவப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாச்சியார் கோயிலில் வெண்கலப் பாத்திரத் தொழிலுக்கான பயிற்சி நிலையமும், தஞ்சாவூரிலும் பண்ணுருட்டியிலும் காகித விளையாட்டுச் சாமான்கள், காகிதப் பொருள்கள் தயாரிப்புக்கான பயிற்சி நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டையில் சரிகை, சித்திரப்பூ வேலைகளில் பயிற்சி யளிக்கப்படுகிறது. இந்த மாவட்டத்தைச் சேர்ந்த தென் காசியிலுள்ள நெடுவயலில் கற்றாழை நாரைக் கொண்டு பாய் முதலியன் செய்யும் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. மணப்பாடு, சித்திரக் கோட்டை, பள்ளப்பட்டி, மாத்தூர் ஆகிய இடங்களில் பனையோலைப் பொருள்களும், மானாமதுரை, நாசரத் ஆகிய இடங்களில் பனைமரத் துண்டுகளாலான மேஜை, நாற்காலிகளும் செய்யப்படுகின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வாலாஜாபேட்டையில் பிரம்பு வளர்ச்சிக்கான பயிற்சி நிலையமும், மதுரை மாவட்டத்திலுள்ள தத்தனேரியில் மூங்கில் வளர்ச்சிக்கான பயிற்சி நிலையமும் பணியாற்றி வருகின்றன. கண்ணாடி வளையல்கள் செய்வதற்கான பணி நிலையம் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நெடுமாரத்தியிலும், பளபளப்பான மண்பாண்டங்கள் தயாரிக்கவும், அவைபற்றி ஆராய்வுமான நிலையம் சென்னையிலும், துணிகளுக்கும் பாய்களுக்கும் அச்சிடும், சாய் மேற்றும் பயிற்சி நிலையம் ராஜபாளையத்திலும், கம்பளிகள், ஜமக்காளங்கள், ரெட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த கோலக்குடியிலும், துணிப் பொம்மைகள் தயாரிப்புக்கான பயிற்சி நிலையம் பாளையங்கோட்டையிலும், அலமாரிகள்,

கதவுகளுக்கான கைப்பிடிகள் முதலியவை தயாரிக்கும் பயிற்சி நிலையம் மதுரையிலும், கலம்காரி அச்சுத் தொழில் பயிற்சி நிலையம் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிக்கிநாயக்கன் பேட்டையிலும், வார்ப்பட உருவங்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையம் மகாபலிபுரத்திலும், கிளிஞ்சல்களைக் கொண்டு நவீன சாமான்கள் தயாரிக்கும் நிலையம் சென்னையிலும், மரத்தில் வர்ணம் தீட்டுவதற்கான பயிற்சி நிலையம் தஞ்சாவூரிலும் நிறுவப்பட்டுத் தொடர்ந்து பலனளித்து வருகின்றன.

மகாபலிபுரத்தில் சிற்ப வேலைக்கான பயிற்சி நிலையமும், கடையநல்லூரில் அங்காடிச் சேலை அச்சடிக்கும் பயிற்சி நிலையமும், கோபால சமுத்திரத்தில் சணல் நாரிலிருந்து ஜமக்காளங்களையும், ரெட்டுகளையும் நெய்வதற்கான பயிற்சி நிலையமும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 15 முதல் 25 பேர் வரை பயிற்சி பெறுகிறார்கள். சில நிலையங்களில் உதவிப் பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அப்பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு மூலப் பொருள்களும், தொழில் நுணுக்கம் பற்றிய ஆலோசனைகளும் குறைந்த செலவில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வசதி ஏற்படும் வகையில் சில நிலையங்கள் கைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இயந்திர சாதனங்கள் யாவும் இலவசமாகக் கிடைக்கின்றன.

**கிராமக் கைத்தொழில்கள்.**—கிராம மக்களின் வாழ்க்கைத் தேவைகள் மிகக் குறைந்தனவாக இருந்த போதிலும், அவற்றை அடையவும் அவர்கள் அனைவருக்கும் ஏற்ற பொருளாதார வசதியில்லை. உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இன்றிப் பல்லாயிரக் கணக்கானோர் பரிதவிக்கின்றனர். இவர்களது வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கும் பொருட்டே சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் செயலாக்கப்பட்டன. கிராம மக்கள் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு வருவாய்க்கான வாய்ப்பு இருக்க வேண்டும். கிராமக் கைத்தொழில்களின் வளர்ச்சி இந்த வாய்ப்பினை அளிக்கின்றது.

வீடுகளின் அன்றாடத் தேவைகளுக்கான பொருள்களைஉற்பத்தி செய்வதே கிராமக் கைத்தொழிலாகும். எண்ணெய்ச் செக்கு,



சோப்பு தயாரித்தல்

கைக்குத்தல் அரிசி, மண்பாண்டத் தொழில், பனைவெல்லம் தயாரித்தல், ஆடுகளைத் தோல் உரித்தல், எலும்புத்தூள் செய்தல், தோல் பதனிடுதல், தேனீ வளர்த்தல், குடிசைத் தீக்குச்சித் தொழில், உட்கொள்ளப்படாத எண்ணெய்களிலிருந்து சோப்பு செய்தல், வெல்லம், கண்டசாரி சர்க்கரை தயாரித்தல், கையினால் செய்யும் காகிதம் தயாரித்தல், தச்சு, கருமான் வேலை செய்தல் முதலியன கிராமக் கைத் தொழில்கள் ஆகும். கிராமக் கைத்தொழில்களுக்கு மட்டும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் சுமார் 224 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்தொழில்கள் பெரும்பாலும் தேசிய நல வளர்ச்சி, சமுதாய நலத்திட்டப் பகுதிகளில் நிறைவேற்றப் படுகின்றன.

சிறுரகக் கைத் தொழில்கள், கிராமக் குடிசைத் தொழில்கள் முதலானவற்றின் வளர்ச்சி ஏராளமான கிராமங்களுக்குப்

பயன்படும் வகையில் பெருமளவுக்கு மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் தடவையாகும். இம்மாதிரி நடவடிக்கை அரசாங்கத்திற்குப் புதிதாகும். ஆகவே, இந்த வளர்ச்சியை மிகக் கவனமாகவும், முன்னேற்றுக்குடனும் செய்யவேண்டியிருந்தது. இந்த விவரங்களைத் தெரிந்து அனுபவம் பெறும் நோக்கத்தோடு, கீழ்பவானிப் பகுதியைச் சேர்நத 6 வட்டாரங்களில் குடிசைத் தொழில் வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. அங்குச் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டதால், பிற பகுதிகளுக்கும் இக்கைத்தொழில்கள் விரிவுபடுத்தப்பட்டன.

கிராமக் கைத்தொழிலாளி மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கின்றார். பிறர் உதவியின்றித் தானாகத் தொழில் நடத்தவோ, தன் உற்பத்திப் பொருள்களை நல்ல விலைக்கு விற்கவோ இயலாதவராய் இருக்கின்றார். கொள்ளை லாபத்தையே குறிக்கோளாகக் கொண்ட லேவாதேவிக்காரர்களும், நடுவாந்திர வியாபாரிகளும், அவரைச் சுரண்டியே வாழ்கின்றார்கள். அதனால் தொழிலாளி மேலும் மேலும் கடனாளியாகிக்கொண்டே போகிறாரே தவிர லாபமடைவதில்லை. வேலையில்லாமல் இருக்கும் ஏராளமான தொழிலாளர்களுக்குத் தனித்தனியே உதவி செய்வது என்பது முடியாத காரியம். ஆனால், சங்க அமைப்புக்கள் அவர்களுக்கு உரிய உதவியினை அளிக்கும். சங்கங்களின் மூலமாகவே அவர்களுக்கு ஒழுங்கான முறையில் வேலையளிக்க முடியும். நியாய விலைக்கு அவர்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள், தொழில் நுணுக்க ஆலோசனை, செய்யப்பட்ட பொருள்களுக்கு விற்பனை வசதி முதலியவை கிடைக்க வழி செய்யக் கூடும். தொழிலாளர்கள் தங்கள் கஷ்டத்துக்கு ஏற்ற வருமானத்தையும் அடைவார்கள். தொழிலாளர்கள் சேர்ந்த தொழிலாளர் சங்கங்கள்தாம் உண்மையிலேயே அவர்களுக்காகப் பாடுபட முடியும். இக்கூட்டுறவுச் சங்கங்கள் அமைவதனால், இடைத்தரகர் நீக்கப்படுகின்றார். நமது திட்டங்களின் லட்சியமான சோஷலிஸப்பாணி சமுதாய அமைப்புக்கு அடிகோலப்படுகிறது.

முதலாவதாகக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் சேரத் தொழிலாளர்களுக்குப் பங்கு மூலதனக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. சங்கங்களுக்குச் செயல்படு மூலதனக் கடன்களும், ரிசர்வ் நிதிக்கு மானியங்களும், நிர்வாகச் செலவுக்கு உதவிகளும் அளிக்கப்படுகின்றன. சங்கங்களின் மூலம் உற்பத்தியாகும் பொருள்களுக்கு விற்பனைவரி விலக்கு உண்டு. தவிரவும்,

நாட்டுச் செக்கில் ஆட்டப்படும் எண்ணெய்க்கும், கைக்குத்தல் அரிசிக்கும் விலைக்கழிவு கொடுக்கப்படுகிறது.

நிலங்கள் வாங்குவதற்கும், வேலை செய்யக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், விற்பனை நிலையங்கள் திறப்பதற்கும், விற்பனையைப் பெருக்குவதற்கும், பொருட்காட்சிச் சாலைகளில் பங்கெடுத்துக் கொள்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் பண உதவி செய்யப்படுகின்றது. கிராமக் குடிசைத் தொழில்கள் நிலைத்திருக்க வளர்ச்சியடைந்த உற்பத்தி முறைகளும் இயந்திர சாதனங்களும் முக்கியமானவை. கிராமத் தொழிலில் உள்ள சங்கடத்தைக் குறைக்கவும், தொழிலாளரின் ஊதியத்தைப் பெருக்கவும் பல நூதன சாதனங்கள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன. நெல் குத்த உரல்களும், மண் பாண்டங்கள் செய்யும் சக்கரங்களுக்குப் பால்பேரிங் வசதியும், செக்குகளுக்குப் பால்பேரிங்கும், ஒற்றை மாட்டு இழுவை வசதியும், கையினால் இழுக்கும் செக்குகளுக்குப் பால்பேரிங் வசதியும், வெல்லம்—கண்டசாரி சர்க்கரை செய்ய நவீன துருத்திகளும், பாய் நெசவுக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட தறிகளும், கயிறு செய்யும் தொழிலுக்கு உயர்ந்த ரக ராட்டைகளும் பாதி விலைக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்த விலையும் கடனாகக் கருதப்பட்டுச், சுலபமான பல தவணைகளில் வசூல் செய்யப்படுகிறது.

அரசாங்கத் தேவைகளுக்கு இந்தச் சங்கங்களிடமிருந்தே பொருள்களை வாங்குவதன் மூலம் விற்பனைக்கு உதவியளிக்கப் படுகிறது. கைக்குத்தல் அரிசி, எண்ணெய், மண்பாண்டம், செங்கல், சோப்பு, தோல் பதனிடுதல், செருப்பு, தோல் சாமான், தச்சு வேலை, தீக்குச்சி, பாய், கூடை, கயிறு, நூல் கயிறு, பனைப்பொருள்கள் முதலான பலவகைப்பட்ட கைத்தொழில்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பத்தமடை பட்டுப்பாய், தஞ்சாவூர் சங்கீதக் கருவிகள், மோடியூர் கற்பொம்மைகள், மாகாளிபட்டி கயிறுகள் கடலூர் விளையாட்டுச் சாமான்கள் முதலிய சிறந்த கைத்திற வேலைகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

மதுவிலக்குக் கொள்கையினால் பாதிக்கப்பட்ட முன்னாள் கள் இறக்குந் தொழிலாளர்களின் நிலைமை ஒரு பெரும் சிக்கலாக இருந்தது. பனை வெல்ல உற்பத்தித் தொழில் அமைப்பு மூலம் அந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டுள்ளது. இதற்கான 1,430 கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 1.6 லட்சம் பேருக்கு வேலை

கொடுக்கப்பட்டது. இந்தப் பனை வெல்லச் சங்கங்கள் ஆண்டு தோறும் முன்னேற்றம் அடைந்து 1960-ல் வெல்ல உற்பத்தியை 25 லட்ச மணங்காக அதிகரிக்கச் செய்துள்ளன. அவற்றின் வருமானத்தை மேன் மேலும் பெருக்கும் வகையில் வெல்ல உற்பத்தியை உயர்ந்த முறையிலும் சிக்கனமாகவும் நடத்துவதற்கும், வெல்லத்தைக் கொண்டு வெள்ளைச் சர்க்கரையும், மிட்டாய்களும் செய்வதற்கும் பலருக்குப் பயிற்சியளிக்கப்பட்டு உள்ளது. அபிவிருத்தி முறையில் வெல்லம் செய்வதற்கான சாதனங்கள் பாதி விலையிலும், மிட்டாய் செய்யும் இயந்திரங்களும், நீராபார்லர்கள் நடத்தத் தேவையான பாத்திரங்களும் இலவசமாகவும் விநியோகிக்கப்பட்டன. பனைவெல்ல விற்பனைக்கு உதவி செய்யும் நோக்கத்தில், பனை மரங்கள் அதிகமாயுள்ள இராமநாதபுரம், சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் நான்கு விற்பனைச் சம்மேளனங்கள் நிறுவப்பட்டன. வெளி மாநிலங்களில் விற்பனை வசதிகளைப் பெருக்க மாநில விற்பனைச் சம்மேளனம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

**கதர் வளர்ச்சி.**—உழவர்களுக்கு வருஷத்தில் சில மாதங்களே வேலை இருக்கிறது. மற்ற மாதங்களிலும் அவர்களுக்கு வேலையளிக்கவும், புதிய வேலை வாய்ப்பினை ஏற்படுத்தவும் கதர்த் திட்டம் தொடங்கப்பட்டது. மாநில அரசியலார் 1947-ம் வருஷத்திலிருந்தே கதர்த் திட்டத்திற்கு முக்கிய இடம் கொடுத்து வருகின்றனர். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளினால், இன்றைக்குச் சுமார் 5 லட்சம் மக்கள் வேலை பெற்றுள்ளார்கள். தனியார் துறையில் நடத்தப்பட்டு வரும் கதர்த் திட்டங்களிலும் பல ஆயிரக் கணக்கான ஏழை மக்கள், வாழ்க்கை நடத்துவதற்கான வசதியைக் கதர்த் தொழிலின் மூலம் பெற்றுள்ளார்கள். சர்க்கார் துறையில் வருஷத்துக்கு வருஷம் கதர்த்துணி உற்பத்தி பெருகிக் கொண்டே வந்துள்ளது. 1958-59-ம் ஆண்டில் 58·44 லட்சம் ரூபாய் பெறுமான கதர் உற்பத்தி செய்யப்பட்டது. அடுத்த ஆண்டில் அது ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்தது.

அம்பர் சர்க்காத் திட்டமும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. தற்போது 30 பரிசிரமாலயங்களில் அம்பர் ராட்டையில் நூல் நூற்கும் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மூன்றுமாத காலம் நடைபெறுகிறது. இம்முறையில் ஒவ்வொரு பரிசிரமாலயத்திலும் வருடம் ஒன்றுக்கு 400 பேர் பயிற்சி பெறுகின்றனர். இதுவரை 15,000 பேர்களுக்கு மேல் பயிற்சி பெற்

றுள்ளார்கள். 1960-61-ல் மேலும் 16,000 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். புதிதாக 9 பரிசிரமாலயங்கள் திறக்கப் படும்.

உற்பத்தியாகும் துணிகளை விற்பனை செய்வதுதான் முக்கியம். அதற்காகப் பல இடங்களில் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இப்போதிருக்கும் 38 நிலையங்களுக்குமேல், 1960–61-ல் 20 புதிய விற்பனை நிலையங்கள் திறக்கப்படும். 1959-ம் ஆண்டில் கதர் 68 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆயிற்று. அடுத்த ஆண்டில் 85 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆயிற்று.

**பட்டுக் கைத்தொழில் வளர்ச்சி.**—மாநிலங்கள் சீரமைப்பின் விளைவாக, கோயம்புத்தூர் மாவட்டம் கொள்ளேகாலத்திலிருந்த தனது முக்கியக் கைத்தொழில் இடத்தை நமது மாநிலம் இழக்கும்படி நேரிட்டது. தற்போது சேலம் மாவட்டத்தில் ஹொசூர் தாலுக்காவிலும், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுக்காவிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோபி தாலுக்காவிலும் பட்டுக் கைத்தொழில் நடைபெறுகிறது. மருத்துவ நிலையங்களுக்கு வழங்கும்பொருட்டுக் கூனூரில் நரம்பு உற்பத்தியும் செய்யப்படுகிறது. மாநிலத்தில் பட்டுப் பூச்சிகள் வளர்ப்பதற்கான 1,500 ஏக்கர் முசுக்கொட்டைத் தோட்டங்கள் சுமார் 1,500 வேளாண்மைக் குடும்பங்களுக்குச் சொந்தமானவையாய் இருக்கின்றன.

பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்தில் அரசாங்கம் பல உதவிகளைச் செய்தது. முசுக்கொட்டைத் தோட்டங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு நிலவரித் தள்ளுபடி செய்யப் பட்டது. ஏக்கருக்கு ரூ 50 கடன் கொடுக்கப்பட்டது. முசுக் கொட்டை விதைகள், பதியங்கள் இவை இலவசமாகவும், உர வகைகள் கொள்முதல் விலைக்கும், பம்பு செட்டுகள் சாதாரண விகித வாடகைக்கும் கொடுக்கப்பட்டன. பேரிகையில் பட்டுப் பூச்சிக் களஞ்சியம் ஒன்றும், 5,500 அடி உயரத்தில் கூனூரில் பட்டுப் பூச்சி வளர்ப்பு நிலையம் ஒன்றும், ஹொசூரில் பட்டுநூல் சுற்றுவதற்கான பயிற்சி நிலையம் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் பட்டுப் பூச்சிக் கூடுகள் மார்க்கெட் ஒன்றும், டெங்கனிக் கோட்டாவில் இணைந்த பண்ணைக் களஞ்சியம் ஒன்றும் நிறுவப் பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் வேப்பனஹல்லி, ராயக்கோட்டா மலைகளிலும் பட்டுப் பூச்சி வளர்ப்பு விரிவாக்கப்பட்டது.

ராயக்கோட்டாவில் உள்ள உயர்நிலை ஆரம்பப் பள்ளியில் மாணவர்களுக்குப் பட்டுப் பூச்சி வளர்ப்பது பற்றிப் போதிக்கப்படுகிறது. டெங்கனிக்கோட்டாவில் பட்டுப் பூச்சி வளர்ப்பவர்களுக்குக் கிணறு வெட்டிக்கொள்ள மானியம் அளிக்கப்பட்டது. ஹொசூரிலுள்ள பட்டுப் பூச்சி வளர்ப்புப் பிரிவுக்காக இந்த ஆண்டில் லாரி ஒன்று வாங்கப்படும்.

**தொழில் நுணுக்கக் கல்வி.**—தொழில் எவ்விதம் வளர்ந்தோங்கி வருகின்றது என மேலே பார்த்தோம். அதன் வளர்ச்சிக்கு ஏற்ற விதத்திலே தொழிற் பயிற்சியும் அமைந்திருக்க வேண்டும். ஆகவே, இரண்டாவது திட்டக் காலத்தில் புதிய தொழிற் கல்லூரிகள், தொழிற் பள்ளிகள், பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றைக் கணிசமான அளவுக்கு நிறுவத் திட்டமிடப்பட்டது. பொறியியல் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காகக் கிண்டிப் பொறியியல் கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கை 125-லிருந்து 275 ஆக உயர்த்தப்பட்டது. கோயம்புத்தூர் அரசினர் கல்லூரியில் ஆண்டு ஒன்றுக்குச் சேர்க்கப்படும் எண்ணிக்கை 75-லிருந்து 120-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள கல்லூரிகளில்

கோவை அரசினர் தொழில் நுணுக்கக் கல்லூரி



ஆண்டு ஒன்றுக்கு மேலும் 200 மாணவர்களைச் சேர்ப்பதற்கு 1960–61-ல் ஏற்பாடு செய்யப்படும். ஆகவே, திட்டக்கால முடிவில் ஆண்டு ஒன்றுக்கு 1,357 மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளிலே சேர்வதற்கு வாய்ப்பு ஏற்படும். முதல் திட்டக் கால இறுதியில் இந்த எண்ணிக்கை 637 ஆக இருந்தது. பொறியியல் பாடங்களில் மேல் பட்டப் படிப்புக்கான ஏற்பாடு கிண்டியில் பொறியியல் கல்லூரியில் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக்காலத்தில் நாகப்பட்டினம், சேலம், செட்டி நாடு, பொள்ளாச்சி, ஆவடி, விருதுநகர், தாழையூத்து, அண்ணாமலைநகர், காஞ்சீபுரம், வேலூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் புதிய தொழிற்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1960–61-ல் சீர்காழி, குடியாத்தம் ஆகிய இடங்களில் மேலும் இரண்டு தொழிற்பள்ளிகள் தொடங்கப்பட்டன. இத் தொழிற்பள்ளிகளில் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் வருடம் ஒன்றுக்கு 1,122 மாணவர்கள் சேர்வதற்கான வசதி இருந்தது. தற்போது 3,012 மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கான அளவில் அவ்வசதி விரிவாக்கப்பட்டுள்ளது.

தொழிற் பள்ளிகள் ஒவ்வொன்றையும் ஒட்டி ஜூனியர் டெக்னிகல் பள்ளிகள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையிலும், மதுரையிலும் இரண்டு தொழில் நுட்பப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டில் இன்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னலஜி, சென்னையில் மத்திய அரசாங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இதற்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இப்பொழுது தொழிற் பயிற்சி நிறுவனங்களும், நிலையங்களும் 10 இருக்கின்றன. இவற்றில் 4 இரண்டாவது திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டன. மற்ற ஆறும் 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ந் தேதியில் மத்திய அரசாங்கத்திடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்பத்து நிலையங்களும் கடலூர், நாகப்பட்டினம், விருதுநகர், பேட்டை, கிண்டி, சென்னையில் இரண்டு, மதுரை, கோயம்புத்தூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இந்தப் பத்து நிலையங்களிலும் மொத்தம் 2,668 மாணவர்களுக்கு இடம் இருந்தது. இந்தத் தொகையில் 1,212 இடங்கள் இரண்டாந்திட்டக் காலத்தில் அதிகமாக்கப்பட்டவையாகும். இவற்றில் எழு

நிலையங்களின் மாணவர் தொகையை 1960-61-ல் இன்னும் 500 வரை அதிகமாக்கத் தீர்மானிக்கப்பட்டது. 1960-61 வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென 8·80 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் இன்னுமொரு நிலையமும் தொடங்கப்படும். இதில் 200 பேர் பயிற்சி பெறுவர். இதற்கென ஒதுக்கியுள்ள தொகை ரூ. 4·54 லட்சம். எனவே, இரண்டாந் திட்டகால முடிவில் இந்நிலையங்கள் அனைத்திலும் அதிகப்படுத்தப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 1,912 ஆக இருக்கும்.

அச்சுத் தொழிலில் முன்னணியில் இருக்குமிடங்களில் சென்னையும் ஒன்றாகையினால், தென் பிரதேசத்துக்கான அச்சுத் தொழிற்பள்ளி சென்னை நகரில் நிறுவப்பட்டுள்ளது. இது 1955-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கப்பட்டது. தற்போது இங்கு 180 மாணவர்களுக்கு இடமுண்டு, 9 விதப் பாடப் பிரிவுகளும் உள்ளன. கோரப்பட்டுள்ள எல்லா இயந்திர சாதனங்களும் வரப்பெற்று, எல்லா பாடப் பிரிவுகளும் புகுத்தப்பட்ட பிறகு ஆண்டொன்றுக்கு 720 பேர் இங்குப் பயிற்சி பெறுவார்கள்.

தோல் தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனத்தில் பாத அணிகள் மற்றும் தோல் சாமான்கள் செய்யும் பிரிவு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இங்குப் பத்துப் பேருக்குப் பயிற்சி வசதியுண்டு. பிரதேச அச்சுப் பள்ளி, தோல் தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு ரூ. 5·77 லட்சம் செலவில் உணவு விடுதி கட்டப்பட்டது.

இவை தவிர, தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த கட்டண வீதத்தில் இண்டியில் மாலை வகுப்புகள் நடத்தப்பட்டன. மனித சக்தியையும், வேலை வாய்ப்பையும் ஆராய்ந்து, தொழிற்கல்வி பயின்றோரை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் வேலை தேடித் தரும் நிறுவனங்களும் விரிவாக்கப்பட்டுள்ளன.

# ೨. மின்சக்தி

பெருந்தொழிலுக்கும் சிறுதொழிலுக்கும் இன்று மின்சாரம் மிக இன்றியமையாது தேவைப்படுகிறது. ஆகவே, தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு மின்சார உற்பத்தியும் பெருகுவது அவசியமாகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மின்சாரத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 30·51 கோடி செலவிடப்பட்டது. அதனால் மேற்கொண்டு 110,200 கிலோவாட் மின்சார சக்தி கிடைத்தது. அதன் விளைவாக, முதல் திட்ட முடிவில் நம் மாநிலத்தில் 256,000 கிலோவாட் மின்சார சக்தி கிடைத்தது. 7,300 மைல்கள் அதிக டென்ஷன் லைன்களும், 8,200 மைல்கள் குறைந்த டென்ஷன் லைன்களும் சேர்ந்து, 3,000 கிராமங்களுக்கும், 32,300 வேளாண்மை பம்பு செட்டுகளுக்கும் மின்சாரம் வழங்கின. அதனால் 4·57 லட்சம் மின்சாரம் உபயோகிப்போர் பயனடைந்தனர்.

இரண்டாவது திட்டக் காலத்தில் மின்சார உற்பத்தியை 5,71,000 கிலோ வாட் அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. திட்டக்காலச் செலவு ரூ. 79 கோடியாகும். 5,500 மைல்கள் அதிக டென்ஷன் லைன்களை (பெரியாறு, குந்தா திட்டங்களின் கீழுள்ள லைன்கள் நீங்கலாக) நிறுவவும், மேலும் 5,000 கிராமங்களுக்கும், நகரங்களுக்கும், 75,000 வேளாண்மை பம்பு செட்டுகளுக்கும் மின்சார வசதியை அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டது.

சென்னையிலுள்ள அனல் மின்சார நிலையத்தை விரிவு படுத்தியதன் விளைவாக 30,000 கிலோவாட் 1958-ம் ஆண்டு ஏப்ரல் முதல் அதிகரித்திருக்கிறது. பெரியாறு நீர் விசை மின்சார நிலையம் முடிவுபெற்று, 1·05 லட்சம் கிலோவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளது. குந்தா மின்சாரத் திட்டம் முடிவடையுந் தறுவாயில் இருக்கிறது. இத்திட்டத்திற்குக் கனடா நாட்டு அரசினர் சுமார் ரூ. 9 கோடி மதிப்புள்ள இயந்திரங்களைக் கொடுத்து உதவியுள்ளனர். குந்தாத் திட்டம் மற்ற நாடுகளும் பார்த்து அதிசயிக்கக் கூடிய முறையில் வெகுவிரைவில் நமது எஞ்சினீயர்களால் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இது நமது பிரதம மந்திரி அவர்களால் சென்ற மார்ச் மாதத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்டது. இதில் இரண்டு மின்சக்தி உற்பத்தி நிலையங்கள்

உள்ளன. இரண்டு நிலையங்களும் இயங்கும்பொழுது 180,000 கிலோவாட் மின்சக்தி உற்பத்தியாகும்.

கிராமங்களுக்கு மின்சார வசதியை அளிப்பதில் நமது மாநிலம் மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாய் இருக்கின்றது என்பது அனைவரும் அறிந்ததே. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முதல் நான்காண்டுகளில் 5,013 கிராமங்கள் மின்சார வசதியைப் பெற்றுள்ளன. அடுத்த ஆண்டில் மேலும் 1,000 கிராமங்கள் இவ்வசதியைப் பெற்றன. இரண்டாவது திட்டக்கால முடிவில் நமது மாநிலத்தில் உள்ள சுமார் 18,000 கிராமங்களில் 10,700 கிராமங்கள் மின்சார வசதியைப் பெற்றிருக்கின்றன. முதல் மூன்று ஆண்டுகளில் 47,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 116,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டது. கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கென லைசென்ஸ் தாரர்களுக்கு ரூ. 25 லட்சம் கடன் வழங்குவதற்கும், 1960–61-ல் மின்சார போர்டுக்குக் கொடுக்கும் கடன் தொகையில் வகை செய்யப்பட்டது.

மின்சாரத் திட்டச் செலவு இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 53 கோடிக்குப் பதில் ரூ. 79 கோடியாக அதிகரித்த போதிலும், இப்பொழுது உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு நமது மாநிலத்துக்குப் போதுமானதாக இல்லை. தொழில் இன்னும் ஏராளமாய்ப் பெருகும். மேலும் பல்லாயிரக் கணக்கான கிராமங்கள் மின்வசதி பெறவேண்டும். தற்போது மின்சார உற்பத்தி பெரும்பாலும் நீர் விசையைக் கொண்டு ஏற்படுவதால் கோடைக்காலங்களில் மின்சக்திப் பற்றாக் குறை அடிக்கடி ஏற்படுகிறது. நெய்வேலியில் அமைக்கப்படும் மின்சார உற்பத்தித் திட்டம் ஓரளவு இந்தக் குறையை நீக்கும் என்று எதிர்பார்க்கலாம். கோடைக்காலத்தில் அல்லாமல் மற்றக் காலங்களில் மட்டும் மின்சக்தியை உபயோகப்படுத்தக் கூடிய வகைகளும் ஆராயப்பட்டு வருகின்றன. அணுசக்தி மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதனாலும் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணமுடியும். அத்துடன் அண்டை மாநிலங்களில் உள்ள மின்சார அமைப்புக்களுடன் இணைப்பதன் மூலமாக மின் சக்தியை எல்லா இடங்களிலும் சரிவர உபயோகிக்கக் கூடிய நிலைமை ஏற்படமுடியும். ஆகவே இதைப் பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

# 10. குடியிருப்பு வசதி

தொழில்கள் வளர்ச்சியடையும்பொழுது, தொழிலாளர்கள் ஓரிடத்தில் குவிந்துபோவது தடுக்க முடியாததாகி விடுகிறது. அப்பொழுது இட நெருக்கடி உண்டாகிறது. தொழிலாளர்களுக்கு அவர்கள் சக்திக்கு உட்பட்ட, சுகாதாரமுள்ள வீடுகள் கிடைப்பதில்லை. ஆகவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிலாளர்கள், குறைந்த வருமானக்காரர்கள், தோட்டத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும், சேரிகளைச் சீரமைக்கவும் திட்டங்கள் தீட்டப் பட்டன. இவற்றின் செலவு ரூ. 4 கோடியே 13 லட்சம் ஆகும்.

தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் செம்பியத்திலும், எருக்கஞ் சேரியிலும் 936 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டன. திட்டக்கால முதல் நான்கு ஆண்டுகளில் வெள்ளனூர், சிவகாசி, விருதுநகர், சிங்காநல்லூர், செம்பியம், பேட்டை முதலிய நகரங்களில் 898 வீடுகள் கட்டி

கோவையிலுள்ள குறைந்த வருமானக்காரர்களுக்கான குடியிருப்புகள்



முடிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் 802 வீடுகள் கட்டப்படும். கூட்டுறவுத் துறையில் சுமார் 674 வீடுகள் கட்டடபட்டன.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், திட்டக் காலத்திற்குள் 3,748 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டது. ஐந்து ஆண்டுகளில் சுமார் 3,910 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, சுமார் 677 மனையிடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இத்திட்டத்திற்கு மொத்தச் செலவு ரூ. 2 கோடியே 79 லட்சம்.

தோட்டங்களில் ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றுகின் றார்கள். அந்நியச் செலவாணி ஈட்டும் தொழில் இது. 1951-ம் ஆண்டுத் தோட்டத் தொழிலாளர் சட்டப்படி ஒவ்வொரு தொழிலாளியின் குடும்பத்துக்கும் வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பது முதலாளியின் கடமையாகும். 1955-ம் ஆண்டு சென்னை தோட்டத் தொழிலாளர் சட்டப்படி முதலாளிகள் ஒவ்வோர் ஆண்டும் குறைந்த அளவு எட்டுச் சதவீதத் தொழிலாளர்க்கேனும் நல்ல வீடுகள் கட்டித்தரவேண்டும். இதற்காக வீடு ஒன்றுக்கு ரூ. 1,920 எனனும் அதிக அளவுக்கு உட்பட்டுத் தோட்டத் தொழிலதிபர்களுக்கு 80 சத வீதம் கடன் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3·46 லட்சம். திட்டக் காலத்தில் 180 வீடுகள் கட்டி முடிக்கப்படவேண்டும் என்பது இலக்கு. இதுவரை 157 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சேரிச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 6,970 மனைக்கட்டுகள் தயாரிக்கவும், 2,600 கட்டிடங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளில் 1,200 மனைக்கட்டுகள் மட்டும் தயார் செய்யப்பட்டிருந்தன. 1960–61-ம் ஆண்டில் 1,279 மனைக்கட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அத்துடன் 890 வீடுகளும் கட்டப்பட்டன. திட்டக் காலத்தில் மொத்தம் 2,895 மனைக்கட்டு களும், 890 குடியிருப்பு வீடுகளும் முடிக்கப்பட்டன. இத் திட்டத்தின் செலவு மதிப்பீடு ரூ. 157 லட்சம்.

கிராமங்களில் வீடுகள் கட்டும் திட்டமொன்றும் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. கிராம மக்களுக்கு அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்கு வீடு ஒன்றுக்கு ரூ. 1,500 என்னும் அதிக அளவுக்கு உட்பட்டு மொத்தச் செலவில் 50 சத வீதம் கடனாகக் கொடுக்கப்படும். சமுதாய நல வளர்ச்சி, தேசீய நல வளர்ச்சிப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 1960–61-ம் ஆண்டில் ரூ. 7·15 லட்சம் செலவில் 100 வீடுகள் கட்டப்பட்டன.

# 11. பெருவழித் துறை

நல்ல தரமான பாதைகள் போக்குவரத்துக்கு முக்கியமானவையாகும். மாநிலப் பெருவழிகளை அமைப்பதில் இரண்டாவது திட்டக் காலத்தில் சிமெண்ட் பாதை 10 மைல் அளவிற்கும், ஆஸ்பால்டிக் காங்கிரீட் பாதை 28 மைல் அளவிற்கும், தார் பாதை 325 மைல் அளவிற்கும் அமைக்கத் திட்டமிடப்பட்டது. முதல் நான்கு ஆண்டுகளில் 8 மைல் சிமெண்ட் பாதையும், 20 மைல் ஆஸ்பால்டிக் காங்கிரீட் பாதையும், 364 மைல் தார் பாதையும் அமைக்கப் பட்டிருந்தன. 1960–61-ல் 1 மைல் சிமெண்ட் பாதையும், 2 மைல் ஆஸ்பால்டிக் காங்கிரீட் பாதையும், 19 மைல் தார் பாதையும் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. மற்றுப் பாதைகளில் 397 மைல் நீள மண்சாலைகளைக் கப்பிச் சாலைகளாக மாற்றவேண்டும் என்று திட்டமிடப்பட்டது. முதல் நான்கு ஆண்டுகளில் 286 மைல் கப்பி பாதைகள் போடப்பட்டன. அடுத்த ஆண்டு 73 மைல் நீளத்துக்குப் பாதை போடப்பட்டது. பாதைகளைத் திருத்தியமைப்பதற்காகப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவைகளும் திட்டக் காலத்தில் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. மேலும் பல புதிய திட்டங்கள் 1960–61-ல் எடுத்துக்கொள்ளப்பட்டன. திட்டத்தில் 105 சிறு பாலங்களும் 46 பெரும் பாலங்களும் கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. அவைகளில் 98 சிறு பாலங்களும், 25 பெரும் பாலங்களும் நான்காண்டுகளில் முடிக்கப்பட்டன. இறுதி ஆண்டில் 13 சிறு பாலங்களும், 12 பெரும் பாலங்களும் கட்டப்பட்டன. 1958-ம் ஆண்டிலிருந்து ஜில்லா போர்டுகளின் நிர்வாகத்தின் கீழிருந்த எல்லா முக்கியப் பாதைகளையும் அரசினரே தங்களுடைய நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவந்துள்ளனர். திட்டக் காலத்தில் ஜில்லா போர்டு பாதைகளுக்குரிய இலக்குகளும், முடிக்கப்பட்ட பணிகளும் கீழே தரப்பட்டுள்ளன :—

| இனம். | 1956—61 இலக்குகள். | 1960—61-ல் முடிக்கப் பெற்றவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தார் பாதைகள் முதலியன .. | 74 | 86 |
| புதிதாகக் கப்பி போடுதல் .. | 708 | 824 |
| சிறு பாலங்கள் .. .. | 131 | 149 |
| பெரும் பாலங்கள் .. .. | 35 | 15 |
| புதிய பாதைகள் அமைத்தல். | 1,700 | 1383 |



செங்கற்பட்டுப் பெருவழி

தொழில் வளப் பெருக்கத்திற்குப் பாதை வசதி முக்கியமானது ஆகும். நமது மாநிலத்தில கடந்த பத்தாண்டுகளில் பாதை அமைப்பில் பெரிய முன்னேற்றம் கண்டுள்ளோம். முதல் திட்டத் தொடக்கத்தில் நமது மாநிலத்தில் 6,800 மைல் கிராமப் பாதைகளும், 14,400 மைல் மற்றப் பாதைகளும் இருந்தன. முதல் திட்டக் காலத்தில் 1,643 மைல் கப்பி பாதையாக மாற்றப்பட்டது. 2,850 மைல் புதிய மண் பாதைகள் அமைக்கப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் 2,860 மைல் கப்பிப் பாதைகள் அமைப்பதற்கும், 1,830 மைல் பாதைகள் அமைப்பதற்கும் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகவே, சென்ற பத்தாண்டுகளில் 4,680 மைல் புதிய பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

# 12. கல்விக் கூடங்கள்

**ஆரம்பக் கல்வி.**—'எண்ணும் எழுத்தும், கண்ணெனத் தகும்' என்று 'பிச்சைப் புகினும் கற்கைநன்றுக' மதித்து வாழ்ந்து வரும் நாடு நமது நாடு. முன்னோர் அன்பாலயங்கள் பல கட்டி ஆண்டவனை வழிபட்டு வந்தனர். அவை அறிவாலயங்களாகவும் விளங்கி வந்தன. இடைக் காலத்தில் கல்விக்கு ஏற்ற சிறப் பளிக்காமல் புறக்கணித்தோம். அதன் பலன், நம் நாடு இன்னும் அறியாமை இருளில் மூழ்கிக்கிடக்கிறது. சுதந்திரம் பெற்ற பின்னர் கல்விக் கூடங்களின் எண்ணிக்கையை அரசினர் பெருக்கி வந்துள்ளனர். குககிராமங்களிலும் கல்வி மணங் கமழச் செய்து வருகின்றனர். 500 பேர் மக்கள் தொகை கொண்ட கிராமத்திற்கு ஓர் ஆரம்பப் பள்ளி வீதம் இப்போது இருக்கின்றது. 300 பேர் மக்கள்தொகை கொண்ட கிராமத்துக்கு ஓர் ஆரம்பப் பள்ளி வீதம் அமைக்க அரசினர் முனைந்து ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

ஆறு முதல் பதினான்கு வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வியினை 1960-ம் ஆண்டிற்குள் அளிக்க வேண்டும் என்று இந்திய அரசியற் சட்டம் கூறுகின்றது. நடைமுறையில் இது சாத்தியப்படாமல் போய்விட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் இந்த இலக்கை அடைய உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதனை யொட்டி நமது மாநிலத்தில் ஆண்டுதோறும் ஆரம்பப்பள்ளிகள் திறக்கப் பட்டு வருகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 1,735 புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகுக்கப்பட்டிருந்தது. ஆறு முதல் பதினான்கு வயதுவரையுள்ள ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட குழந் தைகளைப் பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. முதல் மூன்று ஆண்டுகளில் 6,068 புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு அவைகளில் 4·23 லட்சம் குழந்தைகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டார்கள். 1960ம் ஆண்டில் மேலும் 1,735 வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு 1 லட்சத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குக் கல்வியளிக்கத் திட்டமிடப்பட்டது.

இரண்டாவது திட்டக்கால இறுதியில் சுமார் 32 லட்சம் குழந்தைகள் ஆரம்பப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகளில் சேர்ந்து படிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களில்

ஆறு முதல் 11 வயது வரையிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 27·25 லட்சமாக இருக்கும். இந்த வயதிற்குள் இருக்கக் கூடிய குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 45 லட்சம் அளவில் இருக்கும். ஆகவே, மூன்றாவது திட்டக் காலத்தில் மேலும் 17 லட்சம் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கான வழிமுறைகள் வகுக்கப் படும்.

ஏழ்மை நிலையின் காரணமாகப் பல குழந்தைகள் பள்ளிக்கு வருவது தடைப்பட்டுப் போகிறது. அவர்களையும் பள்ளிக்கு வர வைப்பதற்காக நண்பகல் உணவுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு 10 காசுகள் வீதம் செலவு செய்யப்படுகிறது. இதில் அரசினர் 6 காசு களும், பொதுமக்கள் 4 காசுகளும் கொடுக்கின்றனர். இப் பொழுது 26,000-க்கு மேற்பட்ட ஆரம்பப் பள்ளிகளிலே சுமார் 10 லட்சம் குழந்தைகளுக்கு மத்தியான உணவு அளிக்கப்பட்டு வருகின்றது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத் திட்டம் இன்னும் சில நூறு பள்ளிகளில் மட்டுமே அமுலாக வில்லை. இந்த ஆண்டில் அப்பள்ளிகளிலும் மேற்கொள்ளப் படும். இறுதி இரண்டு ஆண்டுகளில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகியுள்ளது எனலாம். எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்குக் கொண்டு வந்து சேர்க்கப் படும் பொழுது முதல் ஐந்து வகுப்புகளில் சுமார் 50 லட்சம் குழந்தைகள் இருப்பார்கள். அவர்களில் குறைந்தது 17 லட்சம் குழந்தைகளுக்காவது மத்தியான உணவு அளிக்க வேண்டி யிருக்கும். அதற்காக அரசினர் நிதியிலிருந்து 2 கோடி ரூபாய் அளவில் செலவு செய்யவேண்டியிருக்கும். பொதுமக்களிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு 1·5 கோடி ரூபாய் எதிர்பார்க்க வேண்டி யிருக்கும்.

பள்ளிக் கூடங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பள்ளிச் சீரமைப்பு இயக்கம் நடத்தப்படுகிறது. இதுவரை 139 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளுக்கு மேல் நடத்தப்பட்டிருக்கின் றன. பொதுமக்கள் ஏற்றுக்கொண்ட திட்டங்களின் மதிப்பு சுமார் 6 கோடி ரூபாய் ஆகும். அதில் 3·79 கோடி ரூபாய்க்குமேல் மாநாடுகளிலேயே ரொக்கம், பொருள், பணிகள் மூலம் வழங்கப் பட்டுள்ளது. மாநிலத்தில் சுமார் 3·45 லட்சம் குழந்தைகள் இலவச அணியாடை பெற்றுள்ளனர்.

ஆசிரியர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக இதுவரையில் அவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டு வந்துள்ளன. சென்ற நான்கு ஆண்டுகளில் சம்பள உயர்வு மட்டும் மாதம் ஒன்றுக்கு 17 ரூபாய் அளவிற்குக் கொடுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் அரசினருக்கு ஆண்டொன்றுக்கு 2 கோடி ரூபாய் அதிகச் செலவானது. சமீபத்தில் அறிவிக்கப் பட்டுள்ள சம்பளக் கமிஷன் சிபாரிசுகளின் அடிப்படையில் அமைந்த சம்பள விகிதங்கள் ஆசிரியர்களின் வருவாயினை வெகுவாக உயர்த்தியிருக்கின்றன.

**உயர் நிலைக்கல்வி.**—உயர்நிலைப் பள்ளிகளில் 450 புதிய வகுப்புக்கள் ஆரம்பித்து, 14 முதல் 17 வயது வரையுள்ள மாணவர்கள் 18,000 பேர் 4, 5, 6-ம் படிவங்களில் சேர்க்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. இதுவரை 552 புதிய வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு 22,000 மாணவர்கள் அதிக மாக உயர்நிலைப் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள். 1960–61-ல் இன்னும் பல புதிய வகுப்புக்கள் ஏற்படுத்தப்படும். உயர் நிலைப் பள்ளிகளின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காகப் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**பல்கலைக் கழகக் கல்வி.**—பட்டப் படிப்பு, மூன்றாண்டுக் காலக் கல்வியாக 1957–58-லிருந்து மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. 1963—64-லிருந்து எல்லாக் கல்லூரிகளிலும் பி.ஏ. வகுப்புக களில் தமிழைப் பாட மொழியாக்க வேண்டும் என்ற லட்சி யத்தைக் கவனத்தில் கொண்டு, கோவை அரசினர் கல்லூரியை முன்னோடிக் கல்லூரியாக ஆக்கியுள்ளனர். இங்கு 96 மாண வர்கள் படிக்கிறார்கள்.

# 13. பின்தங்கிய வகுப்பினர் நலன்

சமுதாய நல வளர்ச்சியில் அனைவருக்கும் பங்கு இருக்க வேண்டுமாயின், தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தப்பட வேண்டியதும் அவசியமே. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஷெட்யூல்டு ஜாதியார்கள், ஷெட்யூல்டு மலை ஜாதியினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட ஜாதியினர், சமூக நிலையிலும் கல்வி நிலையிலும் பின்னிலையிலுள்ள வகுப்பினர் ஆகியவர்களுக்கு உதவியளிக்க ரூ. 4 59 கோடிக்குச் செலவிடப்பட்டது.

ஷெட்யூல்டு ஜாதியினர் நலனுக்காக ரூ. 3 கோடியே 53 லட்சம் ஒதுக்கப்பட்டது. ஷெட்யூல்டு வகுப்பு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறது. உணவு மானியம் வழங்கப்படுவதுடன் உணவு விடுதியும் கட்டப்படுகிறது. முதல் நான்கு ஆண்டுகளில் 871 பாசனக் கிணறுகள் தோண்ட மானியம் வழங்கப்பட்டுள்ளது. உழவு மாடுகள், கருவிகள்

ஷெட்யூல்டு ஜாதியினருக்குக் காளைகள் வழங்கப்படுதல்



வடிவத்தில் குடும்பத்துக்கு 285 ரூபாய் வீதம் 6,790 குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டில் 340 கிணறுகளுக்கு நிதியுதவியளித்ததுடன், 1,954 ஜோடி உழவு மாடுகளும் கொடுக்கப்பட்டன. இரண்டு குடிசைத் தொழில் பணி நிலையங்களுக்குக் கருவிகளும், சாதனங்களும் வழங்கப்பட்டன. இதுவரை 12,378 மனைகள் கட்டப்பட்டுள்ளன. ஹரிஜனக் காலனிகளில் படிப்படியே மின்சார வசதி செய்து கொடுப்பதற்காக மாநில மின்சார போர்டிடம் ரூ. 5 லட்சம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தீண்டாமையை ஒழிக்கத் தீவிரப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. துணைச் சேவகர்கள் 105 பேர் நியமிக்கப்பட்டனர். கல்விப்படம் 1, கிராமபோன் ரிக்கார்டுகள் 500, சுவரொட்டிகள் 90,000 இவ்வியக்கத்துக்குத் துணை புரிந்தன.

ஷெட்யூல்டு மலை ஜாதியினரின் நலனை முன்னிட்டு இரண்டாவது திட்டத்தில் ரூ. 31·68 லட்சம் ஒதுக்கப்பட்டது. முதல் நான்கு ஆண்டுகளில், தங்கியிருந்து படிக்கும் பள்ளிகள் 26-ம், தங்கியிருக்க வேண்டாத பள்ளிகள் 12-ம், முதியோர் கல்வி நிலையங்களும், உணவு விடுதிகள் 3-ம், உணவு இல்லங்கள் 2-ம் நடத்தப்பட்டன. சென்ற ஆண்டு வரை 665 உணவு மானியங்களும், 202 உபகாரச் சம்பளங்களும் வழங்கப்பட்டன. பாதிக்கடன் அடிப்படையில், உழவு மாடுகள் வாங்கவும், நீலகிரியில் உருளை பயிரிடவும் 782 குடும்பங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. குடிசைத் தொழில்கள் வளர்ச்சியை உத்தேசித்துக் கோத்தகிரியில் பயிற்சி உற்பத்திச் சாலை ஒன்றும், நீலகிரி மாவட்டத்தில் சிறு தொழில்கள் பயிற்சி நிலையங்கள் மூன்றும், கூடை முடையும் நிலையம் ஒன்றும், மகளிர் குடிசைத் தொழில் நிலையங்கள் எட்டும் ஆரம்பிக்கப்பட்டன. தேன் கூடுகளும் வழங்கப்பட்டன. நீலகிரி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் இயங்கும் மருத்துவ யூனிட்டுகள் இரண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏழு குடியேற்ற இடங்களில் வசிக்கும் ஷெட்யூல்டு மலை ஜாதியினருக்குப் பால்பவுடரும், சத்துள்ள உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன. மதுரை மாவட்டத்தில் 11 குடிநீர்க் கிணறுகள் தோண்டப்பட்டன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 700 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சேலம், நீலகிரி மாவட்டங்களில் இரண்டு பாதைகள் போடப்பட்டன.

குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மாணவர்கள் 14,486 பேர்களுக்கு உணவு, உடை, புத்தகங்கள் வழங்கப்

பட்டன. 6,512 மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்பட்டன. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடி மாணவர்களைச் சேர்த்துக்கொண்ட அரசாங்கப் பற்றற்ற உணவு இல்லங்களுக்கு 1,658 மானியங்கள் வழங்கப்பட்டன. கோயம் புத்தூர் மாவட்டத்தில் 5 நூல் நிலையங்களும், 5 படிப்பகங் களும் நடத்தப்பட்டன. உசிலம்பட்டியில் மாணவிகள் உணவு விடுதி ஏற்படுத்தக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்த ஜாதியினரின் முன்னேற்றத்திற்கென்று இரண்டாவது திட்டத் தில் ரூ. 65·79 லட்சம் ஒதுக்கப்பட்டது.

உழவு மாடுகள், விதைகள் வாங்கக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 285 வீதத்தில் 5,191 குடும்பங்களுக்குப் பாதி மானிய அடிப்படையில் நிதியுதவி அளிக்கப்பட்டது. மதுரைத் தொழிற் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் 100 பேருக்கு உணவு விடுதி நடத்தப்பட்டு வருகிறது. கூடை முடையும் குடிசைத் தொழிலில் 640 குடும்பங்களுக்கு மானியம் வழங்கப் பட்டது. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் உபயோகத்துக்காக 121 மலத் தூய்மைக் கக்கூசுகளும், 9 குடி நீர்க் கிணறுகளும் அமைக்கப்பட்டன. இதுவரை 1,066 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பின்னிலை வகுப்பாரின் நலனுக்காக இரண்டாவது திட்டத் தில் ரூ. 506 லட்சம் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் 19,387 உபகாரச் சம்பளங்களும் உணவு மானியங் களும் வழங்கப்பட்டன. மதுரை மாவட்டத்தில் இரண்டு ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

# 14. நோயற்ற வாழ்வு

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று கருதிய நம் முன்னோர், 'நோய்க்கு இடங் கொடேல்' என்று உள்ள உறுதியுடன் உடல் உறுதியும் பெற்று வாழ்ந்தார்கள். காலம் தலைகீழாய் மாறி, வறுமையும் பசியும் மக்களை வாட்டத் தொடங்கவே, பிணியும் பெருகிவிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிணியை எதிர்த்துப் போராடவும் பல்வேறு திட்டங்கள் சேர்க்கப்பட்டன. அவற்றிற்கான செலவு சுமார் 14 கோடி ரூபாயாகும்.

**மருத்துவம்.**—சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 600 பேர் தங்குவதற்கான அழகிய உணவு விடுதி கட்டப்பட்டுள்ளது. புதுப்புது ஆய்வுக்கூடச் சாதனங்கள் வாங்கப் படுவதுடன், ரசாயன, உடலியல் பிரிவுகளும் கட்டப்படுகின்றன. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையும் வளர்ச்சியடைந்து வருகின்றன. ரூ. 1·90 லட்சம் செலவில் 80 மருத்துவர்களுக்கு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. எக்ஸ்–ரே பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. வெளி நோயாளிகளுக்கான பிரிவு ஒன்று ரூ. 12 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றது.

சென்னை மருத்துவக் கல்லூரியில் சிசு மருத்துவத் துறை, ரேடியாலஜி துறை ஆகிய இரு துறைகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. சமூக, தடுப்பு மருந்துத்துறை யொன்றும் நிறுவப் பட்டுள்ளது. இந்தக் கல்லூரியிலுள்ள பல் வைத்தியப் பிரிவை விரிவுபடுத்தி, அதைக் கல்லூரியாக உயர்த்துவதற்கு ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கப் பொது மருத்துவ மனையிலும், ஸ்டான்லி மருத்துவ மனையிலும் சிசு ஆலோசனை நிலையங்களும், மன நோய் மருத்துவத்துறையும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. சென்னை அரசாங்கப் பொது மருத்துவ மனையில் அறுவைக் கூடமும், மார்பு அறுவைச் சிகிச்சைப் பிரிவும் நிறுவப்பட்டுள்ளன. விலங்குத் தொழுவத்திற்கான கட்டிட வேலை முடிந்துவிட்டது. வியாதியைப் பிரித்தறியும் பிரிவுக்கான கட்டிட வேலை தொடங்கப்பட்டுள்ளது. மார்பு அறுவைச் சிகிச்சைப் பிரிவுக்கான சில சாதனங்கள் வாங்கப்பட்டன. அங்கக் குறைவுச் சிகிச்சைப் பிரிவு, சரும, தொழு நோய்த் துறைகள் இவைகளுக்காக ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் ஆண்டு தோறும் 25 மாணவர்கள் நர்ஸ் பயிற்சி பெற்று வருகின்றனர். மருந்து தயாரித்துக் கொடுக்கும் முறையில் சென்னை மருத்துவக் கலலூரியில் 150 பேரும், மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் 100 பேரும் பயிற்சி பெறுகின்றனர். சென்னையிலுள்ள அரசாங்க கண் மருத்துவ மனையில் கண் பரிசோதகர்களுக்குப் பயிற்சி யளிக்கும் பள்ளி யொன்று நிறுவப்படும். ஆய்வுக்கூடத் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு, இருபது பயிற்சி நிலையங்களை நிறுவி ஒவ்வொரு நிலையத்திலும் 10 முதல் 15 நபர்களுக்குப் பயிற்சி யளிக்க இந்திய அரசினர் ஒரு திட்டம் தயாரித்துள்ளனர். அதன்படி ஆண்டு தோறும் 15 நபர்களுக்கு ஓராண்டுக் காலப் பயிற்சியளிக்கத் தமிழ் நாடு அரசாங்கம் முன்வந்துள்ளது. சிறப் பான துறைகளில் பயிற்சி பெற்றுவர மருத்துவ அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் திட்டமும் நடைமுறையில் இருந்து வருகிறது. உரிய காலத்துக்கு முன்னர்ப் பிறக்கும் குழந்தை களின் பாதுகாப்புக்குச் சென்னை கஸ்தூரிபா மகளிர்—சிசுக்களுக் கான மருத்துவ மனையில நோய்களைச் சிறந்த முறையில் பிரித்தறி வதற்கும், புற்றுநோய் சிகிச்சை வசதிகளை அதிகரிக்கச் செய்வதற் கும் ரூ 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மகளிர் சிசு அரசாங்க மருத்துவ மனையில் 40 படுக்கைகளுடன் கூடிய பேறு கால முன்பணிப் பிரிவு ஒன்று ரூ. 21 லட்சம் செலவில் அமைக்கப் படும். சென்னை ராயப்பேட்டை மருத்துவ மனையில் அபிவிருத்தி செய்ய ரூ. 7 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கக் கண் மருத்துவ மனையை வளர்ச்சியுறச் செய்ய ரூ. 5·92 லடசம் ஒதுக்கப் பட்டுள்ளது. கிண்டியிலுள்ள கிங் இன்ஸ்டிடியூட்டில் ஆராய்ச்சிப் பிரிவு ஏற்படுத்தும் வேலை துரிதமாக நடந்து வருகிறது. இங்கே 100 குதிரைகள் தங்குவதர்கு வசதியான லாயங்கள் ரூ. 5 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு உள்ளன. பல்வேறு மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் நர்ஸ்களுக்கு அருகிலேயே விடுதி கள் கட்டிக்கொடுக்கும் திட்டத்திற்கு ரூ. 14·52 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இம்மாதிரியே மருத்துவ அதிகாரிகளுக்கும் விடுதி கள் கட்டித் தரப்படும்.

மாவட்டத் தலைநகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளை விரிவாக்க வும், வளர்ச்சியுறச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்ட ஆரம்ப காலத்தில் மாநில மருத்துவ நிலையங்களில் 9,812 படுக்கைகளுக்கு வசதியிருந்தது. திட்டக் கால முடிவுக்குள்ளாக இது 21,500 அளவிற்கு உயர்ந்துள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது. செங்கல்பட்டு, பாளையங்கோட்டை,

ராமநாதபுரம் ஆகிய இடங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தாலுக்கா, தலைநகரத்திலுள்ள ஆஸ்பத்திரிகள் எல்லாம் அரசாங்க நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. அவைகளுக்கான கட்டிடங்களை விரிவாக்கவும், பல்வேறு வசதிகளைப் பெருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் பல மாவட்டத் தலைநகர மருத்துவ மனைகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு வைத்திய வசதிகள் ஏற்பாடு செய்வதற்காக வளர்ச்சி வட்டாரங்களில் இதுவரை சுமார் 120 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் பணியாற்றும் டாக்டர்களுக்கும், மற்றப் பணியாள்களுக்குமான குடியிருப்பு வசதிக்காகக் கட்டிடங்கள் கட்ட ஏற்பாடாகியிருக்கிறது. கிராமப்புறங்களில் பணியாற்றும் டாக்டர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மலேரியா வியாதியை முழுவதும் அகற்றுவதற்கான விரிவான திட்டம் ஒன்று நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தாக்கு நிலை, தொகுதி நிலை ஆகிய இருவகைத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. இதன்மூலமாக மாநிலத்தில் மலேரியா உள்ள இடங்களில் தக்க மருந்துகளை உபயோகப் படுத்தி அவ்வியாதியை அறவே ஒழித்துவிட முடியும்.

சென்னையிலுள்ள மனநோய் மருத்துவ மனையை வளர்ச்சியுறச் செய்வதுடன், மதுரையில் ரூ. 15·00 லட்சம் செலவில் வேறொரு மனநோய் மருத்துவ மனையையும் நிறுவ அரசினர் தீர்மானித்துள்ளனர். கடந்த நான்காண்டுகளாய் மாநிலத்தில் 10 தொழுநோய் நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. அடையாற்றில் உள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை வளர்ச்சியுறச் செய்ய மானியமாக ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரை மருத்துவக் கல்லூரி, அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் எர்ஸ்கின் ஆஸ்பத்திரி இவைகளில் பல வளர்ச்சித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றிற்கெனத் திட்டத்தில் ஒதுக்கப் பட்ட தொகை ரூ. 84·40 லட்சம். சென்னையிலுள்ள ஒருங்கிணைந்த மருத்துவமனையைச் சார்ந்த கல்லூரியின் வளர்ச்சி வேலைகளுக்காக ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1958-லிருந்து தஞ்சாவூரில் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கி நடைபெற்றுவருகிறது.



மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை—மகப் பேறு பிரிவு

மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் 30 படுக்கைகளுடன் கூடிய 11 க்ஷயரோக சிகிச்சை சாலைகள் நிறுவ ரூ. 32·05 லட்சம் ஒதுக்கப்பட்டது. தாம்பரம், நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ள க்ஷயரோக ஆரோக்கிய சாலைகளின் வளர்ச்சிக்காக ரூ. 8·23 லட்சம் ஒதுக்கப்பட்டது. தாம்பரத்தில் 55 குணப்படுத்தப்பட்ட ஆட்களைக் கவனித்துக்கொள்ளக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தவிர, ரூ. 2·61 லட்சம் செலவில் குடிசைத் தொழில்களும் ஆரம்பிக்கப்படும். க்ஷயரோகம் முற்றிய நோயாளிகளிடமிருந்து மற்றவர்களுக்கு அந்நோய் பரவாமல் தடுப்பதற்காக அவர்களுக்குத் தனியே கட்டிடங்கள் கட்ட ரூ. 10·32 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரை ஆஸ்டின்பட்டியில் உள்ள க்ஷயரோக ஆரோக்கிய சாலையையும், சென்னை நகராண்மைக் கழகம் பராமரித்துவரும் ஒட்டேரியிலுள்ள திருவட்டீஸ்வரர் க்ஷயரோக மருத்துவ மனையையும் அரசியலார் மேற்கொண்டனர்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டமும் நன்கு முன்னேறி வருகின்றது. இப்பொழுது நகரப்புறங்களில் 27, கிராமப் புறங்களில் 82 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இயங்கி வருகின்றன. சென்னை நகரில் தாய்மார்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய

44 நிலையங்களும், ஆண்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய 32 நிலையங்களும் இயங்கி வருகின்றன.

**பொதுச் சுகாதாரம்.**—பொதுச் சுகாதாரத்தைச் சேர்ந்த 11 திட்டங்களின் உத்தேசச் செலவு ரூபாய் 158·75 லட்சமாகும்.

கொள்ளை நோய்கள் பீடித்த கிராமங்களுக்கு விரைந்து சென்று, எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதால் நல்ல பலன் விளைகிறது. ஆகையினால், மோட்டார் வண்டி, இரண்டு ஜீப்புகள், பணியாளர்கள் கொண்ட இரண்டு ஊர் சுற்றும் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றுப்புறம் சுத்தமாய் இருந்தால், நோய் நொடி அணுகாது என்பது யாவரும் அறிந்ததே. அதனால், வீட்டுச் சொந்தக்காரர்களுக்குக் கக்கூசுக் குழிகளைக் குறைந்த விலையில் விநியோகித்து அவர்களைக் கக்கூசுகள் கட்டச் சுகாதாரத் துறையினர் தூண்டுகின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் 15,211 கக்கூசுகள் கட்டப்பட்டன. திட்டக் காலத்தில் பேறு கால — சிசு சுகாதார நிலையங்கள் 489 திறக்கப்பட்டுள்ளன.

யானைக்கால் வியாதியை ஒழித்துக்கட்ட 4 கட்டுப்பாடு யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. அவை தஞ்சாவூர், செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு முதலிய மாவட்டங்களில் 18 லட்சம் மக்களுக்கு நன்மை அளித்துள்ளன. க்ஷயரோகம் இருக்கின்றதா என்று சோதிக்கவும், பி. ஸி. ஜி. அம்மை குத்தவும் 10 பிரிவுகள் உள்ளன. ஐந்து ஆண்டுகளில் 31 லட்சம் மக்களுக்கு ஊசி போடப்பட்டது. கிராமங்களில் தேர்ந்த மருத்துவச்சிகள் இல்லை. ஆகவே, தாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இதற்கான உத்தேசச் செலவு ரூ. 6·22 லட்சம். 3,250 தாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணியாற்றும் பொருட்டு 57 சுகாதாரப் பார்வையாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. சுகாதார உணர்வை மக்களிடத்தில் உண்டாக்கப் பொதுச் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு, கொசுக் கட்டுப்பாடு முதலான பல விஷயங்களை விளக்கும் சிறு வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், கண்காட்சிகள், திரைப்படங்கள் ஆகியவற்றின் வாயிலாகச் சுகாதாரத் துறையினர் செயலாற்றி வருகின்றனர்.

**தண்ணீர் வழங்கும் திட்டம்.**—கிராமப் புறங்களில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டிய அவசியத்தை



கிராமத்தில் தூய குடிநீர் வசதி

யுணர்ந்து, அதற்காகப் பல திட்டங்கள் வகுத்து நிறைவேற்றப் பட்டு உள்ளன. திட்டக் காலத்தில் 9,728 கிணறுகளும், 340 இணைக்கப்பட்ட திட்டங்களும் நிறைவேற்றப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த வேலைகள் அனைத்தும் திட்டக் காலத்திற்குள் முடிவடைந்து உள்ளன. ஆற்றோரக் கிராமங்களில் ஏற்படும் வியாதிகளைத் தடுப்பதற்காக அக் கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கக்கூடிய ஒரு திட்டம் அமுலில் உள்ளது. இது முதலில் தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராபபள்ளி, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிறை வேற்றப்பட்டு வந்தது. பின்னர் மதுரை, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களிலும் இத்திட்டம் அமுலாக்கப்பட்டது. திட்ட முடிவிற்குள்ளாக 397 கிராமங்களுக்குப் பாது காக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கப்பட்டது. நகரப் புறங்களிலும் நல்ல குடிதண்ணீர் கிடைப்பதற்கான திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு உள்ளன. இரண்டாவது திட்டக்கால முடிவிற்குள்ளாக 50 முனிசிபல் நகரங்களிலும், 32 பெரிய பஞ்சாயத்து நகரங் களிலும் குடிதண்ணீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றின்மூலம் 32 லட்சம் மக்கள் பலனடைந்தார்கள்.

# 15. ஒழுக்க வாழ்க்கைக்கு உதவி

சமுதாய வாழ்க்கையைச் சீர்குலைக்கும் தீய செயல்களை நஞ்செனக் கடியத்தான் வேண்டும். அதனால் ஊருக்கும் உலகுக்கும் நன்மையே. ஆனால், இத்துடன் நமது கடமைகள் முடிந்துவிட்டதாக இன்றைய வளர்ச்சியடைந்த நாகரிக உலகம் ஒத்துக்கொள்ளாது. நமது பார்வையிலும் ஒரு புதிய மறு மலர்ச்சி ஏற்பட வேண்டும். ஒரு முறை குற்றஞ் செய்தவர், பின்னர் உணர்ந்து நல் வழிப்படல் இயலும். அதற்கான சூழ் நிலையைச் சமுதாயம் தோற்றுவிக்க வேண்டும். அதுவே உன் னத சமூகம் ஆகும். இவ்வகைத் திட்டங்களுக்காக இரண்டா வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 27·71 லட்சம் ஒதுக்கப் பட்டது. சென்னை புரொபேஷன் குற்றவாளிகள் சட்டம், சென்னை சிறுவர்கள் சட்டம், சென்னை பார்ஸ்டல் பள்ளிகள் சட்டம், சென்னை விபசாரத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ்ச் சீர்திருத்த அதிகாரிகள் சீர்திருத்த வேலையையும், பிற்காப்பு வேலையையும் செய்கிறார்கள்.

**ஆண்களுக்கான பிற்காப்பு இல்லம்**—ஆண்களுக்கான பிற்காப்பு இல்லம் 1957-ல் சென்னை தேனாம்பேட்டையில் அமைக்கப்பட்டது. இப்பொழுது பறங்கிப் பேட்டைக்கு மாற்றப் பட்டுள்ளது. இங்கு 68 பேர் தங்கியிருக்க முடியும். தச்சுப் பட்டறை உள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொழில் வளர்ச்சிக்கு நல்ல கடைகால் அமைக்கிறது. சிறைச்சாலை, பார்ஸ்டல் பள்ளிகளில் சோம்பி இருப்பதன் மூலம், வெளியேறி வந்த பின்னர் போட்டி மிக்க உலகில் தலையெடுக்க முடியாது. ஆகவே, அவ்விடங்களில் தொழிலைச் செய்வது அவர்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கும். எனினும், இன்று இந்தியாவில் இயந்திரத் தொழில்கள் பெருகிக்கொண்டு வருவதால் இங்குப் பழைய முறைகளில் தொழிலைக் கற்றுத் தருவதில் பயனில்லை. எனவே, திருச்சி மத்திய சிறையிலுள்ள தச்சுப் பட்டறை, பாளையங்கோட்டை பார்ஸ்டல் பள்ளியிலுள்ள தச்சு யூனிட், கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள தையல் யூனிட் இவை கள் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

**பெண்களுக்கான பிற்காப்பு இல்லங்கள்.**—சீர்திருத்த நிறுவனங்களிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பெண்களுக்காகப் பிற்காப்பு இல்லம் 1957-ல் வேலூரில் ஆரம்பிக்கப்பட்டது. காஞ்சீபுரம், செங்கல்பட்டு, காரைக்குடி, நாகர்கோவில் ஆகிய இடங்களில் நான்கு இல்லங்கள் தொடங்கப்பட்டன.

வயது வராத பெண்களை விபசார விடுதிகளிலிருந்தும், ஒழுக்கம் கெடக்கூடிய சூழ்நிலைகளிலிருந்தும் விடுவித்து அவர்களைப் பாதுகாக்க மீட்பு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள ஸ்ரீசதனம் அரசாங்கத்தாரால் நிர்வகிக்கப்படுகிறது. மதுரையிலுள்ள இல்லமும் அடைக்கலாபுரத்திலுள்ள இல்லமும் தனியாரால் நடத்தப்படுகின்றன.

தெருக்களில் விபசாரத்திற்கு அழைக்கும் 30 வயதுக்குக் குறைந்த பெண்கள், உஷார் விடுதிகளில் வைத்து நல் வாழ்வுக்கான பயிற்சியளிக்கப்படுகிறார்கள். 1956-ம் ஆண்டு விபசாரத் தடைச் சட்டத்தின் கீழ்க் குற்றம் இழைத்ததாக அவர்கள் விசாரணை செய்யப்படும் கால அளவின்போது அவர்களைத்

மகளிர் மீட்பு இல்லத்தில் தையல் தொழில்



ற்காலிகமாக இந்த இல்லங்கள் பாதுகாக்கின்றன. நாகர் காவிலில் உள்ள பிறகாப்பு இல்லம் சென்ற ஆண்டில் உஷார் டுதியாக மாற்றப்பட்டது. காஞ்சீபுரம், வேலூர், காரைக்குடி ஆகிய இடங்களிலும் உஷார் விடுதிகள் உள்ளன.

கதியற்ற பெண்கள், விதவைகள், பொருளாதார வகையில் மிகவும் துன்பப்படும் பெண்கள் ஆகியோர் பிறர்க்குப் பாரமாக இல்லாமல், தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நடத்திக் கொள்ளும் பொருட்டுத் தொழிற் பயிற்சியளிக்கத் தாம்பரத்தில் 8 ஏக்கரா பரப்பளவுள்ள நிலத்தில் ஒரு பணிமனை அமைக் கப்பட்டுள்ளது. நல்ல வசதிகளுடன், உணவு விடுதி சௌகரியமும் இருக்கின்றது. 150 பெண்களையும் 75 சிறுவர்களையும் சேர்த்துக் கொள்ள முன்பு அனுமதிக்கப்பட்டிருந்தது. 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், 200 பெண்களையும் 100 சிறுவர்களையும் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. கைக்குத்தல் அரிசி யூனிட், சித்திரப்பூத் தையல் வேலை, தையல் வேலை யூனிட், தேனீ வளர்ப்பு யூனிட், ஆகிய மூன்று யூனிட்டுகள் கொண்ட ஒரு தொழிற் பிரிவு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

பெண்கள் தங்கள் குறைந்த வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதால், குடும்ப நிலை உயரும். அதற்கு அவர்களுக்குக் கம்பளி நெசவு, கற்றாழை நார்ப் பொருள், மூங்கில், தென்னோலைப் பொருள் அச்சிடுவது, சாயமிடுவது போன்ற எளிய குடிசைத் தொழில்களில் பயிற்சியளிப்பது நல்லது. எனவே, தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அம்மையகரம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவில், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பண்டாரவாடை, திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள பாளையங்கோட்டை, திருச்சி மாவட்டத்திலுள்ள திருக் கோகர்ணம் ஆகிய இடங்களில் ஐந்து வேலை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாந் திட்டக் காலத்தில் மொத்தம் 16 நிலையங்கள் தொடங்கப்பட்டன.

**சீனியர் சீர்திருத்தப் பள்ளிகள்.**—பன்னிரண்டு வயது, பன்னிரண்டுக்கும் பதினெட்டுக்கும் இடைப்பட்ட வயது உடைய குற்றவாளி இளைஞர்களைத் திருத்திப் பயிற்சியளிக்கச் சீர்திருத்தப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. செங்கற்பட்டிலுள்ள சீர் திருத்தப் பள்ளியில் இடநெருக்கடி நிலவுவதால், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தட்டப்பாறையில் மேற்

கொண்டு ஒரு சீனியர் சீர்திருத்தப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பள்ளியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 300.

இளங் குற்றவாளிகள் விசாரணை செய்யப்படும் கால அளவில் அவர்களைத் தற்காலிகமாகப் பாதுகாக்க நான்கு இல்லங்களை அமைக்க இரண்டாவது திட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது. ஒரு இல்லம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அடைக்கலாபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 1959-ம் ஆண்டி லிருந்து இங்குப் பையன்களும், பெண்களும் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்.

(முற்றும்.)